அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.

# கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

# கூட்டுறவு

கொள்கை விளக்கக் குறிப்பு
2024–2025

மானியக் கோரிக்கை எண்: 12

கே.ஆர். பெரியகருப்பன்
கூட்டுறவுத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2024

## பொருளடக்கம்


| இயல் எண். | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | கூட்டுறவு – ஓர் அறிமுகம் | 1-7 |
| 2 | கூட்டுறவுக் கடன் அமைப்பு | 8-59 |
| 3 | கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | 60-81 |
| 4 | சிறப்பு நோக்கங்களுக்கான கூட்டுறவு நிறுவனங்கள் | 82-88 |
| 5 | நுகர்வோர் கூட்டுறவுகள் | 89-105 |
| 6 | உணவு பாதுகாப்பில் கூட்டுறவு | 106-129 |
| 7 | கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி | 130-142 |
| 8 | ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் | 143-144 |
| 9 | கூட்டுறவுத் தேர்தல் | 145-147 |
| 10 | மின்-அலுவலகம் | 148-150 |
| 11 | வளர்ச்சிப் பாதை | 151-152 |

# இயல் 1

# கூட்டுறவு

## 1.1. அறிமுகம்:

பொதுவான சமூக பொருளாதார பின்னணி கொண்ட நபர்கள் தங்களது தனிப்பட்ட மற்றும் பொது பொருளாதார நோக்கங்களை பூர்த்தி செய்து கொள்ள தாமாகவே முன்வந்து ஒன்றிணைந்து ஜனநாயக முறையில் பங்கேற்பது கூட்டுறவு அமைப்பாகும். இதனடிப்படையில் தமிழ்நாட்டில் பல்வேறு வகையான கிராமப்புற மற்றும் நகர்ப்புற கூட்டுறவு நிறுவனங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றி வருகின்றன.

1.1.2. 1904-ஆம் ஆண்டில் இந்தியாவில் முதல் "கூட்டுறவு கடன் சங்கங்களின் சட்டம்" இயற்றப்பட்டது. முதல் கூட்டுறவு கடன் சங்கம் தமிழ்நாட்டில். திருவள்ளூர் மாவட்டம், திரூரில் தொடங்கப்பட்டது. அதன்பின் தொடர்ச்சியாக பல்வேறு நோக்கங்கள் கொண்ட கூட்டுறவு சங்கங்கள் தமிழ்நாட்டில்

தொடங்கப்பட்டது. அவ்வகையில் நம்நாட்டின் கூட்டுறவு இயக்கத்திற்கு வழிகாட்டும் விதமாக தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் பல்வேறு முன்னெடுப்புகளை இன்று வரை செய்து வருகின்றன.

1.1.3. கூட்டுறவு இயக்கங்கள் இல்லா துறையே இல்லையென்னும் அளவிற்கு பல்வேறு விதமான கூட்டுறவு நிறுவனங்கள் உள்ளபோதிலும், தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் கீழ்க்கண்ட ஐந்து பெரும் பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது.

1. கூட்டுறவு கடன் சங்கங்கள்
2. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்
3. நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள்
4. சிறப்பு நோக்கக் கூட்டுறவு சங்கங்கள்
5. கூட்டுறவு கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி சங்கங்கள்

கூட்டுறவு நிறுவனங்களின் சேவைகள் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடையும் வகையில் தமிழக அரசால் தொடர்ந்து திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**1.2. நிர்வாக அமைப்பு:**

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், தலைமைச் செயலகத்தில் உள்ள இத்துறையின் செயலாளராக உள்ளார்.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கூட்டுறவுத் துறையின் தலைவர் ஆவார்.

1.2.1. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்), நுகர்வோர் கூட்டுறவுகள் மற்றும் பொது விநியோக திட்ட பணிகளை கவனித்து வருகிறார்.

1.2.2. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரியும் கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர்கள் மாநில அளவிலான அலுவலர்கள். இவர்கள் நிதி மற்றும் வங்கி சந்தைப்படுத்தல், திட்டம் மற்றும் வளர்ச்சி, ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம், தேர்தல், தலைமைக் கூட்டுறவுச் சங்கங்கள் முதலிய பணிகளை கவனித்து வருகின்றனர்.

1.2.3. கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர்கள், மாவட்ட அளவிலான அலுவலர்கள். இவர்கள் தலைமை அலுவலகங்களில் உள்ள நிதி மற்றும் வங்கியியல், நுகர்வோர் கூட்டுறவு, சட்டம் மற்றும் பயிற்சி, சட்டம் உள்ளிட்ட கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகளையும் அனைத்து மாவட்டங்களிலும் கண்காணிக்கும் பணிகளை மேற்கொள்கின்றனர்.

1.2.4. கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர்கள் தலைமை அலுவலக மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளரின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிந்து வருகின்றனர். அனைத்து கூட்டுறவு நிறுவனங்களின் செயல்பாட்டை கண்காணித்தல் மற்றும் புதிய சங்கங்களை பதிவு செய்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்கிறார்கள்.

1.2.5. கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரியும் கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் (பொ.வி.தி.), பொது விநியோக திட்டத்தின் செயல்பாடுகளைக் கவனிக்கிறார்.

1.2.6. கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளரின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரியும் கூட்டுறவு சார் பதிவாளர்கள், பொது விநியோக திட்ட பணிகள் கூட்டுறவு நிறுவனங்களின்

செயல்பாடுகளை கண்காணித்தல் போன்ற கூட்டுறவு நடவடிக்கைகளை கவனித்து வருகின்றனர்.

**1.3. கூட்டுறவு நிர்வாகக்குழு அமைப்பு:**

தொடக்க கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த வரை, விவசாயிகள், கடன் பெற்றவர்கள் உள்ளிட்ட சங்க உறுப்பினர்களால் நேரடியாக சங்க தேர்தல் மூலம் நிருவாகக் குழுவினர் தேர்வு செய்யப்படுவார்கள்.

1.3.1. மத்திய மற்றும் தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரை, அதன் உறுப்பினர்களான தொடக்க கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மத்திய கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளிலிருந்து (Delegates) முறையே சங்க தேர்தல் மூலம் நிருவாகக் குழுவினர் தேர்வு செய்யப்படுவார்கள்.

1.3.2. தொடக்க கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மொத்த எண்ணிக்கை 11 அவற்றில் பட்டியலினத்தவர் / பழங்குடியினர்–2, மகளிர் – 3, பொது – 6.

1.3.3. மத்திய மற்றும் தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மொத்த எண்ணிக்கை 21 அவற்றில் பட்டியலினத்தவர் / பழங்குடியினர்–4, மகளிர்–6, பொது – 11.

## இயல் 2

## கூட்டுறவுக் கடன் அமைப்பு

### 2.1. கூட்டுறவுக் கடன்கள்:

கூட்டுறவு வங்கி / சங்கம் என்பது அதன் உறுப்பினர்களுக்கு சொந்தமான ஒரு நிதி நிறுவனம், அவர்கள் தங்கள் வங்கியின் வாடிக்கையாளர்களாகவும் உள்ளனர். இவ்வங்கிகள், பெரும்பாலும் பொதுவான நோக்கமுள்ள உள்ளூர் அல்லது தொழில்முறை உறுப்பினர்களால் நிறுவப்படும்.

2.1.1. சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்குமான, குறிப்பாக பொருளாதாரரீதியாக பின்தங்கிய பிரிவினரின் முன்னேற்றத்தை ஊக்குவிக்கவும், நியாயமற்ற அதிக வட்டி விகிதத்தில் கடன்களை வழங்கும் பணக் கடன் வழங்குபவர்களின் பிடியில் இருந்து அவர்களைப் பாதுகாக்கவும், இச்சங்கங்கள் உருவாக்கப்பட்டது. கூட்டுறவு அமைப்பு ஒத்துழைப்பு, மக்களாட்சி முறையில்

முடிவெடுத்தலும், நிர்வாகமும் மற்றும் தன்விருப்பார்ந்த தடையற்ற (திறந்த) உறுப்புரிமை ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

2.1.2. அதிக வட்டிக்கு பணம் கொடுப்பவர்களின் பிடியிலிருந்து கடன் பெறும் பொதுமக்களை விடுவித்து, அவர்தம் நிதித் தேவைகளை நியாயமான வட்டியில் நிறைவேற்றி அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதில் கூட்டுறவு கடன் சங்கங்கள் முக்கிய பங்கு வகிப்பதுடன், பொதுமக்களிடையே சேமிப்பு மற்றும் முதலீட்டு பழக்கத்தையும் ஊக்குவிக்கின்றன.

**2.2. கூட்டுறவு கடன் சங்க வகைகள்:**

கூட்டுறவு கடன் சங்கங்கள், கிராமப்புற மற்றும் நகர்ப்புற கூட்டுறவுகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. கிராமப்புற கூட்டுறவு கடன் சங்கங்கள், குறுகிய கால கூட்டுறவு கடன் அமைப்பு மற்றும் நீண்டகால கூட்டுறவு கடன் அமைப்பு என

மேலும் வகைப்படுத்தப்படுகின்றன. நகரக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கங்கள், நகர்ப்புற பொதுமக்கள், அரசு / பொது மற்றும் தனியார் துறை நிறுவன ஊழியர்கள் ஆகியோரின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. மேலும், கூட்டுறவு கடன் சங்கங்கள் மட்டுமே மக்களால் எளிதில் அனுகக்கூடிய நிறுவனங்களாகும்.

## 2.3. குறுகிய கால கூட்டுறவு கடன் அமைப்பு:

தமிழ்நாட்டின் குறுகிய கால கூட்டுறவு கடன் அமைப்பு 3 அடுக்குகள் கொண்ட அமைப்பாகும், இது கிராம அளவில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், மாவட்ட அளவில் மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் மாநில அளவில் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றை உள்ளடக்கியது. இச்சங்கங்கள் / வங்கிகள் விவசாயிகளுக்கு, குறிப்பாக, சிறு மற்றும் குறு விவசாயிகள் மற்றும் விவசாயம்

சாராத பிற மக்களின் கடன் தேவைகளை நிறைவேற்றும் மிக முக்கியமான நிறுவனங்களாகும்.

## 2.4. தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி (TNSACB):

தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி, நவம்பர் 1905-இல் நகர்ப்புற கூட்டுறவு வங்கியாக தனது வணிகத்தைத் தொடங்கி, தற்போது சென்னையில் 51 கிளைகளுடன் செயல்பட்டு வருகிறது. இவ்வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம் 1983-இன் கீழ் பதிவு செய்யப்பட்டு, இந்திய ரிசர்வ் வங்கி (RBI) மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (NABARD) வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி, செயல்பட்டு வருகிறது.

2.4.1. இவ்வங்கி, பொதுமக்களிடமிருந்து பெறும் வைப்பு நிதி, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து பெறும் மறுநிதியுதவி, தேசிய கூட்டுறவு

வளர்ச்சிக் கழகம் போன்ற உயர் நிதி நிறுவனங்களிடமிருந்து பெறும் கடன் ஆகியவற்றின் மூலம் நிதியாதாரங்களைத் திரட்டியும், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் வேளாண் மற்றும் வேளாண்சாராத தேவைகளுக்கான நிதியுதவி அளிக்கிறது.

2.4.2. இவ்வங்கி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் வணிக நடவடிக்கைகளில் வழிகாட்டியாக செயல்பட்டு வருகிறது. இவ்வங்கி, இந்தியாவில் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் முதல் மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி என்ற பெருமையை பெற்றுள்ளது.

2.4.3. தலைமைக் கூட்டுறவு வங்கி பராமரிக்கும் பல்வேறு நிதிகளில், தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதி (PCDF), வேளாண் கடன் நிலைநிறுத்து நிதி (ACSF) மற்றும் வைப்புத்தொகை உத்தரவாத நிதி (DGF) ஆகியன சிறப்பாக

குறிப்பிடத்தக்கவை. தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதி, தொடக்க கூட்டுறவு சங்கங்களின் உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் நிதித்தேவைகளுக்கும், வேளாண் கடன் நிலைநிறுத்து நிதி, பயிர்க்கடன் வழங்கலில் தொய்வு ஏற்படா வண்ணம் தொடர்ந்து கடன் வழங்குவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. வைப்புத்தொகை உத்தரவாத நிதி, பொது மக்களின் வைப்பீடுகளை, எதிர்பாரா நிகழ்வுகளால் திருப்பியளிக்க இயலாத சூழ்நிலைகளில் வைப்புதாரர்களுக்கு திருப்பியளிக்க உதவுகிறது. இதனால் கூட்டுறவு வங்கிகள், பொதுமக்களின் நம்பிக்கையை பெற்றுள்ளன.

2.4.4. மத்திய கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பான இவ்வங்கி, விவசாயம் மற்றும் விவசாயம் சாராத இதர கடன்களை வழங்குவதில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கிறது. தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி, பருவகால விவசாய செயல்பாடுகளுக்கான குறுகிய கால

கடன்கள் (STSAO), பண்ணை / விவசாயம் சார்ந்த மத்திய கால கடன்கள் மற்றும் நெசவாளர்களுக்கான நடைமுறை மூலதனக் கடன்கள் ஆகியவற்றிற்காக மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு காசுக் கடன்களை அனுமதித்து வருகிறது. இதுமட்டுமின்றி, தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி, கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுடன் இணைக்க முறையில் கடன்களை வழங்குகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் செயல்பாடுகள் :-

(ரூ. கோடியில்)

| வ. எண் | ஆண்டு | உறுப்பினர் பங்கு மூலதனம் | மாநில அரசு பங்கு | வைப்புகள் | கடன்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2021-2022 | 493.84 | 20.26 | 12819.62 | 13530.12 |
| 2 | 2022-2023 | 540.08 | 20.26 | 12486.51 | 16375.98 |
| 3 | 2023-2024 | 610.93 | 20.26 | 11516.72 | 16968.26 |

**2.5. மத்திய கூட்டுறவு வங்கிகள்:**

மத்திய கூட்டுறவு வங்கிகள், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களில் செயல்பாட்டுப் பகுதிகளைக் கொண்ட தொடக்க கூட்டுறவு கடன் சங்கங்களின் கூட்டமைப்புகளாகும். சேலம் மத்திய கூட்டுறவு வங்கி 06.01.1909-இல் நிறுவப்பட்ட முதல் மத்திய கூட்டுறவு வங்கி ஆகும். தற்போது, தமிழ்நாட்டில், 23 மத்திய கூட்டுறவு வங்கிகள் இயங்கி வருகின்றன. இவை இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் நபார்டு வங்கியால் வழங்கப்படும் நெறிமுறைகளுக்கு உட்பட்டு, தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி மூலம் பெறப்படும் மறுநிதி மற்றும் தங்கள் சொந்த நிதி ஆதாரங்களில் இருந்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு, பங்கு மூலதனம், காப்பு நிதி மற்றும் நடைமுறை மூலதனம் ஆகியவற்றிற்காக நிதியளிக்கின்றன. தமிழ்நாட்டின் 23 மத்திய கூட்டுறவு வங்கிகள், தமது

924 கிளைகள் மூலமாக பொதுமக்களுக்கு பல்வேறு வங்கிச் சேவைகளை வழங்கி வருகின்றன.

2.5.1. குடும்பத்திற்காக அயராது உழைக்கும் மகளிரை கௌரவிக்கும் பொருட்டு, 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்' கீழ் உரிமைத் தொகை பெறுவதற்காக இதுவரை 8 இலட்சத்து 20 ஆயிரம் வங்கிக் கணக்குகள் மத்திய கூட்டுறவு வங்கிகளில் தொடங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் மாதாமாதம் அரசிடமிருந்து பெறப்படும் மகளிர் உரிமைத் தொகை தொடர்புடைய பயனாளிகளின் கணக்கில் வரவு வைக்கப்பட்டு, அவர்களுக்கு உரிய நேரத்தில் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் தொகையில் ஒரு சிறிய பங்கு 'தமிழ் மகள்' என்ற தொடர் வைப்பீட்டு திட்டத்தில் (Recurring Deposit) சேமிக்கப்பட்டு, ஆண்டு இறுதியில் கணிசமான தொகை நியாயமான வட்டியுடன் கிடைக்கும் வண்ணம் செயல்படுத்தப்பட்டு

வருகிறது. பிள்ளைகளின் கல்விக்கட்டணம், புத்தகங்கள், ஆடைகள் வாங்குவது போன்ற செலவுகளுக்கு இத்தொகை பேருதவியாக இருப்பது இத்திட்டத்தின் மறைமுக பலனாகும். இதுவரை 1,617 'தமிழ் மகள்' தொடர் வைப்புக் கணக்குகள் மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் தொடங்கப்பட்டுள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளில் மத்திய கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகள்:-

(ரூ. கோடியில்)

| வ. எண் | ஆண்டு | உறுப்பினர் பங்கு மூலதனம் | மாநில அரசு பங்கு | வைப்புகள் | கடன்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2021-2022 | 1720.81 | 61.81 | 35759.06 | 12354.48 |
| 2 | 2022-2023 | 1898.29 | 61.81 | 39753.79 | 13330.38 |
| 3 | 2023-2024 | 2261.02 | 62.54 | 41100.87 | 18011.19 |

2.5.2. தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகள், பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளுக்கு இணையாக பின்வரும் நவீன வங்கியியல் வசதிகளை வழங்கி வருகின்றன:-

1. மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவை (CORE Banking Solutions)

2. பணப்பரிமாற்ற வசதிகள் - நிகழ்நேர மொத்த தீர்வு மற்றும் தேசிய மின்னணு நிதிப்பரிமாற்றம் (RTGS / NEFT).
3. காசோலை சரிபார்ப்பு முறை (Cheque Truncation System)
4. தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் (ATM)
5. நடமாடும் வங்கியியல் சேவை (Bank on Wheels)
6. ரூபே பற்று அட்டைகள் (RuPay Debit Cards)
7. இணைய வங்கியியல் சேவை (Internet Banking)
8. அலைபேசி வங்கியியல் சேவை (Mobile Banking)
9. உடனடி கட்டண சேவை (IMPS)
10. பொது நிதி மேலாண்மை அமைப்பு (Public Financial Management System)
11. ஆதார் கட்டண இணைப்பு முறை (Aadhaar Payment Bridge System)
12. சிறிய தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் மூலம் சேவை (Micro ATMs)
13. ஆதார் அடிப்படையிலான பணம் வழங்குச் சேவைகள் (Aadhaar enabled Payment System)

14. ஒருங்கிணைந்த கட்டண முறை (UPI)
15. பாரத் கட்டணம் செலுத்தும் முறை (Bharath Bill Payment System)
16. விரைவு தகவல் குறியீடு (QR code) அடிப்படையிலான பணப் பரிமாற்ற சேவை
17. e-KYC
18. பாரத் மின் வணிக கட்டண நுழைவாயில் (BePG)

**2.6. சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை இரண்டாக பிரித்து, நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி உருவாக்கம்:**

நாமக்கல் மாவட்டம் 1997-இல் உருவாக்கப்பட்டது. இதில் 2 வருவாய் கோட்டங்கள், 8 வருவாய் வட்டங்கள், 30 வருவாய் குறு வட்டங்கள் மற்றும் சுமார் 369 கிராமங்கள் உள்ளன. நாமக்கல் மாவட்டத்தில் 816 கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன, அவற்றில் 169 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் ஆகும். மேலும் சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் 29 கிளைகள்

நாமக்கல்லில் செயல்படுகின்றன. பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் கோரிக்கையை ஏற்று, சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை பிரித்து, நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து அறிக்கை அளிக்க குழு அமைக்கப்பட்டது.

2.6.1. வைப்பு நிதி சேகரித்தல் மற்றும் தொழில் வாய்ப்புகள் குறித்து குழுவின் சாத்தியக்கூறு அறிக்கையை ஆய்வு செய்த பிறகு, சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி என இரண்டாக பிரித் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. புதிதாக உருவாக்கப்பட்ட மத்திய கூட்டுறவு வங்கி 07.03.2024 அன்று (பதிவு எண்.நா.நா.327) தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம் 1983-இன் பிரிவு 10-ன்கீழ் நாமக்கல் வருவாய் மாவட்டம்

முழுவதையும் அதன் செயல்பாட்டுப் பகுதியாகக் கொண்டு பதிவு செய்யப்பட்டது. நிர்வாகக் குழு 13.03.2024 அன்று பொறுப்பேற்று ரிசர்வ் வங்கியிடமிருந்து வங்கி உரிமத்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றன.

**2.7. தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள்:**

தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள், ஒவ்வொரு குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட எல்லைக்குள்ளும் வசிக்கும் உறுப்பினர்களின் பொருளாதார தேவைகளை பூர்த்தி செய்யும் நிறுவன ரீதியான அமைப்புகள் ஆகும். தமிழ்நாட்டில் வேளாண் சார்ந்த மற்றும் வேளாண் சாரா நடவடிக்கைகளுக்காக மக்களுக்கு கடன் வழங்க 4,454 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் 151 கிளைகளுடன், 12,525 கிராம ஊராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன.

2.7.1. அனைத்து கிராமப்புற மக்களுக்கும் கடன் வழங்கும் பணியுடன் பல்வித சேவைகளை வழங்குவதன் மூலம் கூட்டுறவு இயக்கத்தின் அடையாளமாக தொடக்க

வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் திகழ்கின்றன. இவை சங்க உறுப்பினர்களை கூட்டுறவு நிறுவனக் கடன் வழங்கும் அமைப்புடன் இணைத்து மக்களாட்சி தத்துவத்தின் அடிப்படையில் செயல்படுகின்றன. நலிவுற்ற பிரிவினருக்கு முக்கியமாக சிறு, குறு விவசாயிகள் மற்றும் பட்டியலின / பழங்குடியின விவசாயிகளின் பல்வேறு கடன் தேவைகளை நிறைவேற்றுவதுடன், நியாயவிலைக் கடைகள், மருந்தகங்கள், பெட்ரோல் விற்பனை நிலையங்கள், வேளாண் சேவை மையங்கள், வேளாண் மருந்தகம், போன்ற கடன் அல்லாத சேவைகளையும் இச்சங்கங்கள் வழங்கி வருகின்றன.

2.7.2. விவசாயிகள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தொய்வின்றி சேவைகளை வழங்கிட, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் உள்ள காலிப்பணியிடங்கள் மற்றும் ஊழியர்களே இல்லாத தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களை கண்டறிந்து, மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையங்கள் (DRB) மூலம் பணியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

## விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

**2.8. உழவர் கடன் அட்டை திட்டம் – பயிர்க்கடன்:**

**“உழுவார் உலகத்தார்க் காணியஃ தாற்றா**
**தெழுவாரை எல்லாம் பொறுத்து”** (குறள்: 1032)

<u>கலைஞர் உரை</u>:- பல்வேறு தொழில் புரிகின்ற மக்களின் பசி போக்கிடும் தொழிலாக உழவுத் தொழில் இருப்பதால் அதுவே உலகத்தாரைத் தாங்கி நிற்கும் அச்சாணி எனப்படும்.

தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் விவசாயிகளுக்கு உழவர் கடன் அட்டை திட்டத்தின் கீழ் 7% வட்டி விகிதத்தில் குறுகிய காலப் பயிர்க்கடன்களை வழங்கி வருகின்றன. இப்பயிர்க்கடன்கள் குத்தகை விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாய தொழிலாளர்களுக்கும் வழங்கப்படுகின்றன. உரிய தவணை காலத்திற்குள் கடனை திருப்பி செலுத்தும் விவசாயிகள் கடனுக்கான வட்டித் தொகையினை செலுத்தத் தேவையில்லை. அரசு, இவ்வட்டிச் சுமையினை ஏற்றுக்கொண்டு தொடக்க வேளாண்மைக்

கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு விவசாயிகள் சார்பாக வழங்குகிறது. வெவ்வேறு வகையான பயிர்களுக்கு, சாகுபடி பரப்பளவிற்கேற்ப மாநில தொழில்நுட்பக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட அளவிற்கு பயிர்க் கடன் வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் பயிர்க்கடன்களுக்கு தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி விதிமுறைகளின்படி ரூ.1.60 இலட்சம் வரை எவ்வித பிணையமும் இன்றியும், ரூ.1.60 இலட்சத்துக்கு மேற்பட்டு ரூ.3 இலட்சம் வரை பிணையத்தின் பேரிலும் கடன்கள் வழங்கப்படுகின்றன. பயிர்க்கடன்கள் ரொக்கப் பகுதி மற்றும் பொருள் பகுதிகளை அதாவது ரொக்கத்துடன் சேர்த்து விதைகள், உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை உள்ளடக்கியதாகும்.

2.8.1. தமிழ்நாடு கூட்டுறவுத் துறையின் வரலாற்றில் முதன்முறையாக 2023-24ஆம் ஆண்டில் பயிர்க்கடன்

வழங்கல் ரூ.15,000 கோடியைத் தாண்டியுள்ளது என்பதும், தற்போது, மொத்தமாக ரூ.15,542.84 கோடியை கடனாக வழங்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. நடப்பு நிதியாண்டில், 18,36,345 விவசாயிகளுக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ரூ.15,542.84 கோடி வழங்கியுள்ளது. மேலும், நடப்பு நிதியாண்டில் அதிக எண்ணிக்கையில் புதிய விவசாயிகள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

2.8.2. காவிரி டெல்டா மாவட்டங்களில், 2022-23-ஆம் ஆண்டில், 4,88,866 விவசாயிகள் ரூ.3,288.98 கோடி பயிர்க்கடன் பெற்று பயனடைந்துள்ளனர். இது 2023-24-ஆம் ஆண்டில் 14% உயர்ந்து, காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள 5,00,380 விவசாயிகளுக்கு ரூ.3,744.59 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.

**2.9. உழவர் கடன் அட்டை திட்டம் – கால்நடை வளர்ப்புக் கடன்:**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் 2021-ஆம் ஆண்டிலிருந்து, உழவர் கடன் அட்டை திட்டத்தின் கீழ் விவசாயம் சார்ந்த நடவடிக்கைகளுக்காக, கால்நடை வளர்ப்போரின் நடைமுறை மூலதனத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு, 7% வட்டி விகிதத்தில், கால்நடை பராமரிப்பு கடனை வழங்கி வருகின்றன. பெற்ற கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளிடமிருந்து வட்டி ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. இந்த வட்டி இழப்பானது அரசால் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு ஈடு செய்யப்படுகின்றது. உழவர் கடன் அட்டை திட்டத்தின் கீழ் வட்டி ஊக்கத் தொகை பெறுவதற்கான உச்சபட்ச கடன் வரம்பாக ரூ.3.00 இலட்சத்திற்குட்பட்டு, கால்நடை வளர்ப்புக் கடனாக ரூ.2.00 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.

2.9.1. 2022-23-ஆம் ஆண்டில், 2,90,290 விவசாயிகள் ரூ.1,379.09 கோடி அளவிற்கு கால்நடை வளர்ப்புக் கடன் பெற்று பயனடைந்துள்ளனர். இது 2023-24-ஆம் ஆண்டில் 75% உயர்ந்து, 4,53,305 விவசாயிகளுக்கு ரூ.2,406.77 கோடி அளவிற்கு கால்நடை வளர்ப்புக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**2.10. தானிய ஈட்டுக்கடன்:**

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் 5,47,800 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 4,047 கிடங்குகள் உள்ளன. அவற்றில் 1,050 கிடங்குகள் ஏற்கெனவே கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தின் அங்கீகாரம் பெற்று பதிவு செய்யப்பட்டுள்ளன. கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டும் விவசாய விளைபொருட்களுக்கு நல்ல விலையினை பெற்றுத் தரவும் சிறு, குறு விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடன் தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக

தானிய ஈட்டுக் கடன்களை வழங்கி வருகின்றன. இது விவசாயிகள் தங்களின் விளை பொருட்களை வைத்து கடன் பெறுவதற்கும், அதே நேரத்தில் விவசாய விளை பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும் போது அவற்றை விற்றுப் பயனடைவதற்கும் உதவுகிறது.

2.10.1. 2022-23-ஆம் ஆண்டில் ரூ.334.68 கோடி அளவிற்கு தானிய ஈட்டுக்கடன் பெற்று 10,792 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மேலும், 2023-24-ஆம் ஆண்டில் 8,102 விவசாயிகளுக்கு ரூ.378.86 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. 2023-24-ஆம் ஆண்டில், நிதி உதவியின் அளவை அதிகரிக்க, அதிகபட்ச கடன் வரம்பு ரூ.10 இலட்சத்தில் இருந்து ரூ.25 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

## நலிவடைந்தவர்களை முன்னேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

### 2.11. சுய உதவிக் குழுக்கடன்:

சுய உதவிக் குழு இயக்கமானது ஏழை மக்களுக்கு நிதி உதவி வழங்குவதிலிருந்து, சமூக முன்னேற்றத்திற்கான

இயக்கமாக வளர்ந்துள்ளது. முக்கியமாக ஊரகப் பெண்களின் வறுமையை ஒழிக்கும் அரசின் கொள்கை முடிவுகளில் ஒரு முக்கிய பகுதியாக விளங்குகிறது. 2021-22-ஆம் ஆண்டில் ரூ.681.65 கோடி அளவிற்கு கடன் பெற்று 19,296 சுய உதவிக் குழுக்கள் பயனடைந்துள்ளனர்.

2.11.1. சுய உதவி குழு கடன் வரம்பினை அதிகரிக்கும் பொருட்டு, 2020-21-ஆம் ஆண்டில் ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.12 இலட்சமாகவும் மற்றும் 2021-22-ஆம் ஆண்டில் ரூ.12 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாகவும் சுய உதவிக் குழு கடன் உச்சவரம்பு உயர்த்தப்பட்டுள்ளதன் மூலம் கடன் வரம்பு இரண்டு மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

2.11.2. 2022-23-ஆம் ஆண்டில் ரூ.2010.84 கோடி அளவிற்கு 49,356 சுய உதவி குழுக்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. 2023-24-ஆம் ஆண்டில் 142% உயர்ந்து,

ரூ.4874.87 கோடி அளவிற்கு 76,871 சுய உதவி குழுக்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

**2.12. கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு வழங்கப்படும் கடன்கள்:**

கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் சமூக பொருளாதார நலனை மேம்படுத்துதல், நிதிச்சுதந்திரம் அளித்தல் மற்றும் சுயசார்படையச் செய்தல் போன்றவற்றை கருத்தில் கொண்டு குறைந்த வட்டி விகிதத்தில் அதாவது ஆண்டிற்கு 5% வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படுகிறது.

2.12.1. 2022-23-ஆம் ஆண்டில் 5,589 கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ரூ.11.30 கோடி அளவிற்கு கடன் பெற்று பயனடைந்துள்ளனர். இது 2023-24-ஆம் ஆண்டில் இரு மடங்கு உயர்ந்து, 5,843 கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு ரூ.23.23 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

### 2.13. மாற்றுத் திறனாளிகளுக்கான கடன்:

மாற்றுத்திறனாளிகளின் நிலையை மேம்படுத்தும் பொருட்டு கடன் கூட்டுறவு நிறுவனங்கள் வட்டி இல்லாக்கடன் (அதாவது உரிய காலத்தில் கடனை திருப்பி செலுத்துபவரிடம் வட்டி வசூலிப்பதில்லை) வழங்கி வருகின்றன. இது மாற்றுத்திறன் குறைபாடுகளின் விளைவுகளை குறைத்து அவர்களின் சமூக மற்றும் உளவியல் மறு வாழ்விற்கு உதவும். மேலும் அவர்களின் பொருளாதாரத் திறனை மேம்படுத்தும்.

2.13.1. மாற்றுத் திறனாளிகளுக்கு கடன் வழங்குவதில் சிறப்பாக செயல்பட்டதற்காக தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி 'சிறந்த கடன் வழங்கும் நிறுவனம்' (Best Channelising Agency) என்ற ஒன்றிய அரசின் விருதினை ஐந்து முறை பெற்றுள்ளது.

2.13.2. 2022-23-ஆம் ஆண்டில் 15,558 மாற்றுத் திறனாளிகள் ரூ.71.46 கோடி அளவிற்கு கடன் பெற்று பயனடைந்துள்ளனர். 2023-24-ஆம் ஆண்டில் ரூ.62.21 கோடி கடன் பெற்று 12,874 மாற்றுத் திறனாளிகள் பயனடைந்துள்ளனர்.

## கூட்டுறவு நிறுவனங்களின் நலன்

**2.14. மத்தியக் கூட்டுறவு வங்கிகள்:**

மத்திய கூட்டுறவு வங்கிகள் (CCBs), வங்கி ஒழுங்குமுறை சட்டம், 1949 மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம், 1983 ஆகிய இரண்டு சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. மத்திய கூட்டுறவு வங்கியானது இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ஆகிய இரண்டு வங்கிகளால் மேற்பார்வையிடப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் 23 மத்திய கூட்டுறவு

வங்கிகள், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் உள்ளன. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரால் நடத்தப்பெறும் ஆய்வுக்கூட்டங்கள் மூலமும், இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) ஆகியவற்றின் மேற்பார்வை நடவடிக்கைகள் மூலமும் மத்திய கூட்டுறவு வங்கிகளின் நலன் கண்காணிக்கப்படுகிறது.

2.14.1. மத்திய கூட்டுறவு வங்கிகளின் சிறந்த செயல்திறனுக்காக பராமரிக்கப்பட வேண்டிய சிறந்த அளவுருக்கள் கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:-

| | |
|---|---|
| மூலதனத்திற்கும் இடர் நிறை சொத்துக்களுக்குமான விகிதம் (CRAR) பேசல் III விதிமுறைகளின்படி | 9%க்கும் மேல் |
| மொத்த செயல்படாத சொத்துக்கள் – Gross NPA (GNPA) | 5% க்கும் குறைவாக |

| | |
|---|---|
| நிகர செயல்படாத சொத்துக்கள் – Net NPA (NNPA) | 3% க்கும் குறைவாக |
| கடனுக்கும் வைப்புக்கும் இடையிலான விகிதம் (CD விகிதம்) | 70%-80% |

மத்திய கூட்டுறவு வங்கிகளின் நலனை மேம்படுத்த பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன:-

1. வைப்புத் தொகை சேகரித்தல் - குறிப்பாக நடப்புக் கணக்கு சேமிப்புக் கணக்குகள் வைப்புகள்
2. கடன் மீட்புக்கான சட்ட நடவடிக்கைகள் மூலம் செயல்படாத சொத்துக்களை குறைப்பது
3. மூலதனத்தை உயர்த்துதல் (அடுக்கு-I & அடுக்கு-II)
4. மூலதனத்திற்கும் இடர் நிறை சொத்துக்களும் இடையே உள்ள விகிதத்தை (CRAR) நிர்ணயிக்கப்பட்ட சதவீதத்திற்கு குறையாமல் பராமரித்தல்
5. பண்ணை சார கடன்களுக்கான ஒரு முறை சிறப்பு கடன் தீர்வு திட்டம் (NFS - SLSS 2023) போன்ற சிறப்புக் கடன் தீர்வுத் திட்டங்கள்
6. உறுப்பினர் ஆதரவுத் திட்டம் (MSP)
7. கூட்டுறவு வங்கி சேவைகளை விளம்பரப்படுத்துதல்
8. உறுப்பினர் விழிப்புணர்வு நிகழ்ச்சி

வணிக வங்கிகளுடன் போட்டியிடும் வகையில் வங்கி/பகுதி சார்ந்த வணிகத் திட்டத்தை உருவாக்க மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**2.15. பயிர்க்கடன் தள்ளுபடி 2021:**

கடந்த 2021-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட உழவர் கடன் அட்டை (KCC) பயிர்க்கடன் தள்ளுபடி திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு, 2021-22 நிதியாண்டில், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு)-க்கு செலுத்த வேண்டிய மறுநிதி தொகை ரூ.4,200.00 கோடியும், அதற்குண்டான வட்டி ரூ.50.20 கோடியும் அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது.

2.15.1. மேலும், 2021-22 முதல் 2023-24 நிதியாண்டு வரை, கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டிய தள்ளுபடித் தொகையாக ரூ.4,455.37 கோடியும், நிலுவையிலுள்ள தள்ளுபடித் தொகை மீதான வட்டியான

ரூ.1,430.27 கோடியையும் பயிர்க்கடன் தள்ளுபடியாக 2021-ஆம் ஆண்டுக்காக கூட்டுறவு நிறுவனங்களுக்கு அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது.

**2.16. பொது நகைக் கடன் தள்ளுபடித் திட்டம் 2021:**

பொது நகைக்கடன்களை சில தகுதிகளின்கீழ் உண்மையான ஏழை எளிய மக்கள் பயனுறும் வகையில், ஒரு குடும்பத்திற்கு 40 கிராமுக்குட்பட்டு நகைக்கடன்களை அரசு தள்ளுபடி செய்தது. இதுவரை ரூ.4,818.88 கோடி மதிப்பிலான நகைக்கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டு, பயனாளிகளுக்கு தள்ளுபடிச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளது. நகைக் கடன் தள்ளுபடி கோரிக்கைக்காக கூட்டுறவு நிறுவனங்களுக்கு அரசு இதுவரை ரூ.4,215.58 கோடியை வழங்கியுள்ளது.

**2.17. மகளிர் சுய உதவிக் குழுக் கடன் தள்ளுபடித் திட்டம் 2021:**

மகளிரின் பொருளாதார மேம்பாட்டினை ஊக்குவிக்கும் நோக்குடன், மகளிர் சுய உதவி குழுக்கள் கூட்டுறவு நிறுவனங்களில் பெற்றிருந்த கடன் நிலுவைத்

தொகை ரூ.2,755.99 கோடியை அரசு தள்ளுபடி செய்ததன் மூலம் 1,17,617 குழுக்களில் உள்ள 15,88,309 உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர். இத்தள்ளுபடித் தொகையில் கூட்டுறவு நிறுவனங்களுக்கு இதுவரை ரூ.1,800 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது.

**2.18. பண்ணை சாராக் கடன்கள் மற்றும் இதர நீண்ட கால நிலுவை இனங்களுக்கான சிறப்பு கடன் தீர்வுத் திட்டம் 2023:**

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் பொதுமக்களுக்கு பல்வேறு வகையான கடன்களை வழங்கி வருகின்றன. கடன்தாரர்களின் வட்டிச்சுமையை குறைக்கவும், கூட்டுறவு நிறுவனங்களில் நீண்ட காலமாக வசூல் ஆகாமல் நிலுவையுள்ள தவணை தவறிய கடன்களை வசூல் செய்து இந்நிறுவனங்களின் நிதிநிலையைப் பலப்படுத்தவும் பண்ணைசாராக்

கடன்களுக்கான சிறப்புக் கடன் தீர்வுத் திட்டம் 2023 செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2.18.1. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள், நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நகர கூட்டுறவு வங்கிகள், தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், பெரும்பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள், வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஆகியவற்றின் மூலம் வழங்கப்பட்டு வரும் சிறுவணிகக் கடன், தொழிற்கடன், வீட்டுவசதிக் கடன், சுய உதவிக்குழுக் கடன் உள்ளிட்ட பல்வேறு வகையான பண்ணைசாராக் கடன்களுக்கும், வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் வேளாண் விளைபொருட்களை கொள்முதல் / விற்பனை செய்த வகையில்

உறுப்பினர்களிடமிருந்து வரவேண்டிய இனங்களுக்கும் இத்திட்டம் பொருந்தும்.

2.18.2. 31.12.2022-இல் முழுமையாக தவணை தவறி நிலுவையில் உள்ள கடன்களுக்கு மட்டுமே இத்திட்டம் பொருந்தும். கடன் வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஒப்பந்தம் மேற்கொள்ளும் நாள் முடிய அசலுக்கு 9 சதவீதம் சாதாரண வட்டி வசூலிக்கப்படும். அபராத வட்டி, இதர செலவினங்கள் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும்.

2.18.3. இத்திட்டத்தின் கீழ் 2,83,575 தகுதியுள்ள கடன்களாக கண்டறியப்பட்டு, 31.03.2024 வரை ரூ.97.82 கோடி கூட்டுறவு நிறுவனங்களுக்கு வசூலாகியுள்ளது. இதுவரை இத்திட்டத்தின் மூலம் 37,652 கடன்தாரர்கள், ரூ.63 கோடி அளவிலான கடன்சுமை குறைந்து பயனடைந்துள்ளனர்.

**2.19. பயிர்க் காப்பீடு:**

எதிர்பாராத நிகழ்வுகளால் விவசாயிகள் சாகுபடி செய்த பயிர்களின் மகசூல் பொய்த்துப்போதல் / பயிர்ச்சேதம் ஆகியவற்றால் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படும் போது,

அவ்விழப்பினை ஈடுகட்டி, விவசாயிகளின் பொருளாதாரத்தை நிலைப்படுத்தச் செய்யும் நோக்கத்துடன், 2016-ஆம் ஆண்டு ரபி பருவம் முதல் **பிரதம மந்திரி பயிர்க்காப்பீட்டுத் திட்டம்** (PMFBY) மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் காரீஃப் 2020 பருவம் முதல் சில திருத்தங்களுடன் **'திருத்தியமைக்கப்பட்ட பிரதம மந்திரி பயிர்க்காப்பீடு திட்டமாக'** (Revamped-PMFBY) செயற்படுத்தப்பட்டு வருகிறது.

2.19.1. இத்திட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக 2022-23-ஆம் ஆண்டில், 3,37,893 விவசாயிகள் சேர்க்கப்பட்டு, காப்பீட்டுக் கட்டணமாக ரூ.20.86 கோடி வசூலிக்கப்பட்டு, தொடர்புடைய காப்பீட்டு நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது. 2023-24-ஆம் ஆண்டில் 31.03.2024 வரை, 1,24,269 விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக சேர்க்கப்பட்டு, ரூ.14.96 கோடி காப்பீட்டுக்

கட்டணம் வசூலிக்கப்பட்டு தொடர்புடைய காப்பீட்டு நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

2.19.2. 2016-17-ஆம் ஆண்டு முதல் பயிர்க்காப்பீடு செய்த விவசாயிகளுள் 31.3.2024 வரை 30,68,432 விவசாயிகளுக்கு ரூ.6,136.07 கோடி மகசூல் இழப்புக்கான இழப்பீட்டுத் தொகை கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

## 2.20. தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை பல்சேவை மையங்களாக மாற்றுதல்:

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், தமது வருவாயைப் பெருக்கிடவும், ஊரகப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்கிடவும் ஏதுவாக, கடன் அல்லாத பல்வகை இதர வணிக நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் பல்சேவை மையங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலம், வேளாண் இயந்திரங்கள் / கருவிகள், தானியக் கிடங்குகள் மற்றும் பண்ணை வண்டிகள் போன்றவற்றை வாடகைக்கு

வழங்குதல், பதனிடும் அலகுகள் மற்றும் சில்லறை விற்பனை முகமைகள் நடத்துதல், பொதுச்சேவை மையங்கள் மூலம் அரசின் நலத்திட்டங்களை குடிமக்களிடம் கொண்டு செல்லுதல் போன்ற பல்வேறு வகையான சேவைகள் விவசாயிகளுக்கும், ஊரகப்பகுதிவாழ் மக்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

2.20.1. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிலிருந்து மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் (4%) நிதியுதவி பெறப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதில், அறுவடைக்குப் பிந்தைய உட்கட்டமைப்புகள் சார்ந்த திட்டங்களுக்கு இந்திய அரசின் வேளாண் உட்கட்டமைப்பு நிதியின் கீழ் 3% வட்டி மானியம் வழங்கப்படுகிறது.

2.20.2. இதுவரை ரூ.432 கோடி மதிப்பிலான 4.762 திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டதன் மூலம், 2.637 தொடக்க

வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், பல்சேவை மையங்களாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வழங்கிய வசதிகளைப் பயன்படுத்தி இதுவரை ரூ.69.45 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்:-

<table>
<tr><th>வ. எண்</th><th>திட்டப்பணிகள்</th><th>எண்ணிக்கை</th><th>பயனாளிகளின் எண்ணிக்கை</th></tr>
<tr><td>1</td><td>வேளாண் இயந்திரங்கள்</td><td>1876</td><td>38,120</td></tr>
<tr><td>2</td><td>புதிய தானியக் கிடங்குகள் கட்டுதல்</td><td>179</td><td rowspan="2">48,07,279</td></tr>
<tr><td>3</td><td>தானியக் கிடங்குகளை நவீனமயமாக்கல்</td><td>244</td></tr>
<tr><td>4</td><td>பண்ணை வாகனங்கள்</td><td>429</td><td>20,79,858</td></tr>
<tr><td>5</td><td>பதனிடும் அலகுகள் மற்றும் இதர கருவிகள்</td><td>2034</td><td>19,764</td></tr>
<tr><td colspan="2">மொத்தம்</td><td>4762</td><td>69,45,021</td></tr>
</table>

**2.21. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை கணினிமயமாக்கல்:**

இந்திய அரசு திட்டத்தின் கீழ், 60 (இந்திய அரசு): 40 (தமிழ்நாடு அரசு) என்ற நிதிப்பங்கீட்டில் தொடக்க

வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் கணினிமயமாக்கல் ரூ.140.07 கோடி நிதியில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து 4,532 கூட்டுறவு நிறுவனங்களையும் ஒரே கட்டமாக கணினிமயமாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ், அனைத்து நிறுவனங்களுக்கும் வன்பொருள் வாங்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள மென்பொருளில் இருந்து தரவு நகர்த்துதல் மற்றும் தேசிய அளவிலான PACCS மென்பொருளை நிறுவுதல் ஆகியவை நடைபெற்று வருகின்றன. இது விவசாய உறுப்பினர்களுக்கு அதிக அளவில் பயனளிக்கும் மற்றும் கூடுதல் வணிக செயல்பாடுகளை வழங்கும்.

**2.22. கூட்டுறவு உறுப்பினர் ஆதரவுத் திட்டம்:**

நலிவடைந்த அல்லது வாழ்திறன் குறைந்த, நட்டத்தில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களை புத்துயிரூட்டும் நோக்கில்

‘கூட்டுறவு உறுப்பினர் ஆதரவுத் திட்டம்‘ இவ்வாண்டு முதல் புதிதாக தொடங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிதியாண்டிலும் எதிர்பார்க்கப்படும் மொத்த இலாபத்தில் குறிப்பிட்ட தொகையினை நலிவடைந்த அல்லது வாழ்திறன் குறைந்த இணைப்புச் சங்கங்களுக்கு மத்திய கூட்டுறவு சங்கங்களும், தலைமை கூட்டுறவு சங்கங்களும் வழங்குகின்றன. உதவி தேவைப்படும் சங்கங்களை கண்டறிய அனைத்து தலைமை கூட்டுறவு சங்கங்களின் மேலாண்மை இயக்குநர்களையும் உள்ளடக்கிய மாநில அளவிலான குழு உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழு, அனைத்து தலைமை கூட்டுறவு சங்கங்களிடமிருந்தும் அறிக்கை பெற்று தொகுத்து துறைத் தலைவருக்கு அறிக்கையிடும். இக்குழு நிதியாண்டின் ஒவ்வொரு காலாண்டிலும் கூடி துறைத் தலைவரின் கீழ் செயல்படும் அனைத்து கூட்டுறவு சங்கங்களின் நிதிநிலையினை ஆய்வு செய்து, நிதியுதவி

தேவைப்படும் இணைப்புச் சங்கங்களை தேர்ந்தெடுத்து மற்றும் இத்திட்டத்தின் கீழ் நீட்டிக்கப்படும் ஆதரவின் தன்மையினை முடிவு செய்கின்றது. மேலும், இத்திட்டத்தின் மூலம் உதவி பெற்ற இணைப்புச் சங்கங்களின் செயல்திறனையும் மாநில அளவிலான குழு ஆய்வு செய்கிறது.

2.22.1. தேர்வு செய்யப்பட்ட இணைப்பு சங்கங்கள், தொடர்புடைய தலைமை கூட்டுறவு சங்கங்கள் மூலம் வட்டி தள்ளுபடி (Interest Rebate), குறைந்த வட்டியில் மென்கடன் (Soft Loans), கூட்டு முயற்சிகள் (Joint Ventures) போன்ற வகையில் ஆதரவைப் பெறும் வங்கி மற்றும் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றை தொகுத்து துறைத் தலைவருக்கு அறிக்கை அளிக்கிறது.

2.22.2. குறுகியகால கடன் அமைப்பில், தேர்ந்தெடுக்கப்பட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி நிதியுதவி வழங்குகின்றது.

மத்திய கூட்டுறவு வங்கிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட அதன் இணைப்புச் சங்கங்களுக்கு நிதியுதவியினை வழங்குகின்றன. மற்ற தலைமை கூட்டுறவு சங்கங்கள், மாநில அளவிலான குழுவின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட அதன் இணைப்புச் சங்கங்களுக்கு உதவி வழங்குகின்றன.

2.22.3. 2023-2024 நிதியாண்டில், தலைமை கூட்டுறவு சங்கங்கள் அவற்றின் இணைப்புச் சங்கங்களுள் நிதிக்காரணிகளை மேம்படுத்த (To improve financial parameters) வேண்டிய தேவையுள்ள 33 இணைப்புச் சங்கங்களுக்கு ரூ.21.23 கோடி உதவி வழங்கியுள்ளன. மேலும், நடப்பாண்டு நட்டத்தில் செயல்படும் சங்கங்கள், ஆதாரக்குறைவு அல்லது நிதிச்சமமின்மை உள்ள சங்கங்கள் என 1,317 இணைப்புச் சங்கங்களுக்கு (தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கங்கள், தொடக்க கூட்டுறவு பண்டக

சாலைகள் மற்றும் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்) மத்திய கூட்டுறவு வங்கிகளால் ரூ.24.86 கோடி நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

**2.23. தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி:**

தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியானது விவசாயம் சார்ந்த மக்களின் பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாராத நீண்டகாலக் கடன் தேவைகளை நிறைவேற்றிட உருவாக்கப்பட்டதாகும்.

2.23.1. தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி தனது சொந்த நிதியைக் கொண்டு தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் தொடர்ந்து கடன் வழங்க நிதியுதவி அளித்து வருகிறது. இவ்வங்கியின் பங்கு மூலதனம் 31.03.2024 அன்றுள்ளபடி ரூ.53 கோடியாகும், 2023-24-ஆம் ஆண்டில் ரூ.526 கோடி நகைக்கடன் வழங்கியுள்ளது.

2.23.2. இவ்வங்கியானது தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலம் நீண்டகாலக் கடன்கள் வழங்க ஏதுவாக, ஆண்டுக்கு ரூ.100,00 கோடி வீதம் (4 ஆண்டுகளுக்கு ரூ.400 கோடி) அரசு உத்தரவாதம் பெற்று தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதியுதவி பெற்றிட தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் செயல்பாடுகள் (முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிட்டு)

**(ரூ.கோடியில்)**

| ஆண்டு | வைப்புத் தொகை நிலுவை | கடன் நிலுவை |
|---|---|---|
| 2021-22 | 196 | 833 |
| 2022-23 | 202 | 924 |
| 2023-24 | 215 | 1121 |

**2.24. தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்:**

தமிழகத்தி 180 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வங்கிகள், பண்ணை சார்ந்த பணிகளுக்கான நீண்டகாலக் கடன் வழங்கிட உருவாக்கப்பட்டவையாகும். ஆனால் தற்போது தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதியுதவி கிடைக்கப் பெறாத நிலையில், இவ்வங்கிகள் தங்களிடம் உள்ள நிதியிலிருந்தும், தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மறுநிதியுதவி பெற்றும் பிரதானமாக நகைக்கடன்களை வழங்கி வருகின்றன. இவற்றுள் 58 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் நேரடியாக நிரந்தர வைப்புகள் சேகரிக்கின்றன.

2.24.1. இவ்வங்கிகள் தற்போது தமது சொந்த நிதியிலிருந்து தங்க நகை ஈட்டின் பேரிலான பண்ணை சார்ந்த

மத்திய கால கடன்கள் வழங்கி வருகின்றன. 2023-24-ஆம் ஆண்டில் மட்டும் ரூ.42 இலட்சம் மத்திய கால கடன்களாக வழங்கப்பட்டுள்ளன. இவ்வங்கிகளால் 2023-24-ஆம் ஆண்டில் ரூ.1,571 கோடி நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 157 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் பொதுச்சேவை மையங்கள் துவக்கப்பட்டு, பொது மக்களுக்கு பல்வேறு மின்னணு-சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் செயல்பாடுகள் (முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிட்டு)

(ரூ.கோடியில்)

| ஆண்டு | வைப்புத் தொகை நிலுவை | கடன் நிலுவை |
|---|---|---|
| 2021-22 | 72 | 813 |
| 2022-23 | 82 | 935 |
| 2023-24 | 99 | 1070 |

## நகர்ப்புற மற்றும் புறநகர் பகுதி பொருளாதார முன்னேற்றத்திற்கான கூட்டுறவு நிறுவனங்கள்

### 2.25. நகர கூட்டுறவு கடன் அமைப்பு:

மாநில அளவில் தமிழ்நாடு நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் கடன் சங்கங்களின் இணையத்தையும், மாநிலத்தில் நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் செயல்படும் 127 கூட்டுறவு நகர வங்கிகள் மற்றும் 115 நகர கூட்டுறவு கடன் சங்கங்களையும் உள்ளடக்கியது நகர கூட்டுறவு கடன் அமைப்பு.

### 2.26. தமிழ்நாடு நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் கடன் சங்கங்களின் இணையம்:

தமிழ்நாடு நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் கடன் சங்கங்களின் இணையம் மாநிலத்தில் உள்ள நகர கூட்டுறவுக் கடன் இயக்கத்தின் வளர்ச்சியினை மேம்படுத்துவதையும், நகர்ப்புற மக்களின் கடன் தேவைகளை நிறைவு செய்யும் பணியில் நகர கூட்டுறவு வங்கிகளுக்கு வழிகாட்டியாக, செயல்படுவதையும் முக்கிய நோக்கமாக கொண்டு 1988 முதல் செயல்பட்டு வருகிறது. இணையத்தின் துணைவிதிகளில்

மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களையடுத்து தற்போது நகர கூட்டுறவு கடன் சங்கங்களையும் தனது உறுப்பினராக இணைத்து நகர கூட்டுறவு கடன் சங்கங்களின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக செயல்படுகிறது.

2.26.1. மேலும், இவ்விணையமானது நகரக் கூட்டுறவு வங்கிகளின் நிர்வாகம், பணியாளர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் வங்கிகளில் நவீன வங்கியியல் தொழில் நுட்பங்களை நடை முறைப்படுத்துதல் போன்றவற்றில் உதவி புரிந்து வருகிறது. தமிழ்நாடு நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் கடன் சங்கங்களின் இணையம், அனைத்து நகர கூட்டுறவு வங்கிகளும் இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி செயல்படுவதை வழிநடத்தும் அமைப்பாக திகழ்கிறது. இந்த இணையமானது நகரக் கூட்டுறவு வங்கிகளில், மைய வங்கியியல் தீர்வு முறையிலான

சேவையினை நடைமுறைப்படுத்துவதை ஒருங்கிணைத்து செயல்படுத்தி வருகிறது.

2.26.2. நகர கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பங்களிப்பாக பெறப்படும் தொகையை கொண்டு நகர கூட்டுறவு வங்கிகளின் வளர்ச்சி நிதி ஏற்படுத்தப்பட்டு, இந்நிதியை இணையம் பராமரித்து வருகிறது. இந்நிதியின் மூலம் நலிவுற்ற நகர கூட்டுறவு வங்கிகள், போதுமான நிதி மூலதனத்தை பேணுவதற்கு நகர கூட்டுறவு வங்கிகளின் இணையம் உதவுகிறது. உறுப்பினர் உதவித் திட்டத்தின் கீழ் நலிவடைந்த வங்கிகளை தெரிவு செய்து அவ்வங்கிகளுக்கு உதவி வருகிறது.

**2.27. நகர கூட்டுறவு வங்கிகள்**:

நகர கூட்டுறவு வங்கிகள், நகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வங்கிச் சேவைகள் மற்றும் கடன் வசதிகளை அளித்து வருகின்றன. மாநிலத்தில்

தற்போது 127 நகர கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. நகர கூட்டுறவு வங்கிகள் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு பதிவு செய்யப்பட்டு, இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்கள் மற்றும் வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்திற்குட்பட்டும் செயல்படுகின்றன. முதல் நகர கூட்டுறவு வங்கி காஞ்சிபுரம் மாவட்டத்தில் செயல்பட்டுவரும் பெரிய காஞ்சிபுரம் நகர கூட்டுறவு வங்கி 08.10.1904-இல் பதிவு செய்யப்பட்டது.

2.27.1. இவ்வங்கிகள், பொது மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று வீடு கட்டுதல், வணிகம் மற்றும் உறுப்பினர்களின் அவசர மற்றும் சொந்த தேவைகளுக்காக நகைக் கடன் உள்ளிட்ட இதர பண்ணை சாரா காரியங்களுக்காக கடன் வசதிகளை அளித்து வருகின்றன.

2.27.2. வாடிக்கையாளர்களுக்கு நவீன வங்கியியல் சேவையினை அளிப்பதற்காக நகர கூட்டுறவு வங்கிகளில்

மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

2.27.3. இவ்வங்கிகளால் 2022-23-ஆம் ஆண்டில் 8,13,075 உறுப்பினர்களுக்கு ரூ.7,195.23 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. 2023-24-ஆம் ஆண்டில் 8,31,981 உறுப்பினர்களுக்கு ரூ.7,948.71 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. 2023-2024-ஆம் நிதியாண்டில் கடந்த ஆண்டை விட 10.47 சதவீதம் கடன் கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது. இக்கடன், 18,713 சிறுவணிகர்களுக்கு வழங்கப்பட்ட ரூ.58.76 கோடியையும் உள்ளடக்கியதாகும். இதன் மூலம், அதிக வட்டியில் கடன் வழங்கும் தனியாரிடமிருந்து பல சிறு வணிகர்கள் கடன் பெறுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

**2.28. நகர கூட்டுறவு கடன் சங்கங்கள்:**

தமிழ்நாட்டில் துரிதமான நகரமயமாக்கலால், நகர்ப்புறங்களில் செயல்பட்டு வந்த சில தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், கிராமங்களில் வளர்ச்சியின் அடிப்படையில் நகரமயமாக்கலின்

காரணத்தினால், அதற்கேற்ப கடன்களை வழங்கிட, நகர கூட்டுறவு கடன் சங்கங்களாக மாற்றம் செய்யப்பட்டு தொடர்ந்து அப்பகுதியில் வசிக்கும் உறுப்பினர்களுக்கு கடன் வழங்கி வருகின்றன. நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் 115 நகர கூட்டுறவு கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. முதல் நகர கூட்டுறவு கடன் சங்கம், தூத்துக்குடி மாவட்டத்தில் செயல்பட்டுவரும் குலசேகரப்பட்டினம் நகர கூட்டுறவு கடன் சங்கம் 05.02.1922-இல் பதிவு செய்யப்பட்டது.

2.28.1. இச்சங்கங்கள், பொது மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, சிறு வணிகர்கள், கைவினைக் கலைஞர்கள் மற்றும் நடுத்தர வருவாய் பிரிவினருக்கு, வீட்டுவசதிக்கடன், வணிகக்கடன் மற்றும் இதர பண்ணைசாராக் கடன்களை வழங்கி வருகின்றன.

2.28.2. இச்சங்கங்களால் 2022-23-ஆம் ஆண்டில் 2,49,736 உறுப்பினர்களுக்கு ரூ.1,847.08 கோடி கடன்

வழங்கப்பட்டுள்ளது. 2023-24-ஆம் ஆண்டில் 2,56,754 உறுப்பினர்களுக்கு ரூ.2,133.09 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. 2023-2024-ஆம் நிதியாண்டில் கடந்த ஆண்டை விட 15.48 சதவீதம் கூடுதலாக கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், நகரக் கூட்டுறவு கடன் சங்கங்களால் நகர் புறத்திலுள்ள 3,452 சிறு வணிகர்களுக்கு ரூ.8.17 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**2.29. பணியாளர் கூட்டுறவுச் சிக்கன நாணய மற்றும் கடன் சங்கங்கள்**:

மாநிலத்தில் மொத்தம் 1,699 கூட்டுறவு சிக்கன நாணய மற்றும் கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் மத்திய மற்றும் மாநில அரசுப் பணியாளர்கள், அரசு சார்ந்த பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனப் பணியாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தவும், உறுப்பினர்களுக்கு நியாயமான வட்டியில் கடன் வழங்குவதையும், முக்கிய நோக்கமாகக்

கொண்டுள்ளன. இச்சங்கங்கள் 31.03.2024 தேதியில் 9,52,729 எண்ணிக்கையிலான உறுப்பினர்களுடனும், ரூ.1,974.82 கோடி பங்குத் தொகையுடனும், நடைமுறை மூலதனமாக ரூ.13,192.63 கோடியுடனும், உறுப்பினர்களுக்கு 2023-24-ஆம் ஆண்டில் ரூ.11,651.56 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கியும் செயல்பட்டு வருகின்றன.

## இயல் – 3

## கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

### 3.1. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்:

தமிழ்நாட்டில், 1928-ஆம் ஆண்டில், கள்ளக்குறிச்சியில் முதல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் அமைக்கப்பட்டது. தற்போது 115 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வட்டம் மற்றும் வட்டார அளவில் செயல்பட்டு வருகின்றன. விவசாயிகளின் வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வதற்கு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உதவி புரிகின்றன. சங்க உறுப்பினர்கள் மற்றும் நுகர்வோர் / வணிகர்கள் ஆகியோரை நேரடியாக இணைப்பதற்கான விற்பனைத் தளத்தை ஏற்படுத்தி அதன் மூலம் இடைத்தரகர்கள் / முகவர்களின் தலையீட்டினை நீக்கி, உறுப்பினர்களின் வேளாண் விளைபொருட்களை சரியான விலைக்கு

சந்தைப்படுத்துவதற்கான சாதகமான சூழலை இச்சங்கங்கள் ஏற்படுத்தி தருகின்றன. மேலும், விவசாய இடுபொருட்களான விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், வேளாண் கருவிகள் ஆகியவற்றை விநியோகித்தும், விளைபொருட்களின் மீது தானிய ஈட்டுக்கடன் வழங்கியும், வேளாண் விளைபொருட்களைப் பதனிடும் பணியினையும் மேற்கொண்டு வருகின்றன. நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை நகர்வு செய்யும் முதன்மைச் சங்கங்களாக செயல்படுவதுடன் நியாயவிலைக் கடைகளை நடத்தி அத்தியாவசியப் பொருட்களை பொது விநியோகத்திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்தும் வருகின்றன. சில சங்கங்கள் பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்களை நடத்தி பொதுமக்களுக்கு தரமான பெட்ரோல் மற்றும் டீசலை

விற்பனை செய்து வருவதுடன் எடைமேடையையும் நடத்தி வருகின்றன.

3.1.1. அனைத்து வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் புரள் வணிகம் 2023-24-ஆம் ஆண்டில், ரூ.2,883.97 கோடி ஆகும்.

**3.2. வேளாண் விளைபொருள் விற்பனை:**

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், தனது உறுப்பினர்களின் வேளாண் விளைபொருட்களை இலாபகரமான விலைக்கு விற்பதற்கு ஏதுவாக ஏல விற்பனைக் களங்கள், உலர் களங்கள் மற்றும் கிடங்குகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை விவசாயிகளுக்கு வழங்குகின்றன. மேலும், விவசாயிகளுக்கு, வேளாண் விளைபொருட்களின் சந்தை விலை நிலவரங்களை அளிப்பதுடன், வேளாண் விளைபொருட்களுக்கான நியாயமான சந்தைப்படுத்துதலை ஏற்படுத்தி கொடுக்கின்றன.

சில சங்கங்கள், வேளாண் விளைபொருட்களை, பதப்படுத்துவதற்கும் மற்றும் மதிப்புக் கூட்டுவதற்கும் நேரடியாக கொள்முதல் செய்கின்றன. இச்சங்கங்கள் 2023-24-ஆம் ஆண்டில், ரூ.1,002.11 கோடி மதிப்பிற்கு வேளாண் விளைபொருள்களை விற்பனை செய்துள்ளன.

**3.3. விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம்:**

கூட்டுறவுகளுக்கிடையே கூட்டுறவு என்பதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் ஆகும். இத்திட்டத்தின்கீழ் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாய உறுப்பினர்களின் விவசாய விளைபொருட்களை ஆதாய விலைக்கு விற்பனை செய்து, பெறப்படும் தொகையினை, உறுப்பினர்கள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பெற்ற கடனுக்கு ஈடு செய்யும் வகையில் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், கடன்தாரர்களுக்கு சந்தைப்படுத்துவதற்கான வசதியினை

ஏற்படுத்தி கொடுத்ததன் மூலம் இச்சங்கங்கள் 2023-24-ஆம் ஆண்டில், ரூ.6.05 கோடி அளவிற்கு கடன் நேர் செய்யப்பட்டுள்ளது.

**3.4. விற்பனையுடன் இணைந்த நுகர்வோர் கூட்டுறவு:**

விவசாயிகளின் விளைபொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு, பதப்படுத்தி, மதிப்புக் கூட்டப்பட்டு, கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், விற்பனை செய்கின்றன. இதனால் தரமான பொருட்கள் நியாயமான விலையில் பண்டகசாலைகளால் விற்பனை செய்யப்படுவதோடு விவசாயிகளுக்கு ஆதாய விலை கிடைக்கவும் வாய்ப்பாக அமைகிறது. இதனால் இப்பொருட்கள் தரம் உறுதி செய்யப்பட்டு ஆதாய விலையில் நுகர்வோருக்கு கிடைக்கிறது.

3.4.1. 2023-24-ஆம் ஆண்டில், ரூ.117.15 கோடி மதிப்பிலான மதிப்புக் கூட்டப்பட்ட வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**3.5. தானிய ஈட்டுக்கடன்:**

அறுவடைக் காலங்களில், விவசாயிகள் தங்களது வேளாண் விளைபொருட்களை, அவசர பணத் தேவைகளுக்காக மிகக்குறைந்த விலைக்கு விற்பனை செய்வதைத் தவிர்க்க, கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தானிய ஈட்டுக்கடன்களை வழங்கியும், வாடகை அடிப்படையில் சேமிப்பு வசதி அளித்தும் வருகின்றன. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் 2023-24-ஆம் ஆண்டில், ரூ.128.04 கோடி அளவிற்கு தானிய ஈட்டுக்கடன்கள் வழங்கியுள்ளன.

**3.6. நகைக்கடன் வழங்குதல்:**

விவசாய உறுப்பினர்களின் அவசர பொருளாதாரத் தேவைக்காக 2023-24-ஆம் ஆண்டில், ரூ.657.94 கோடி

அளவிற்கு கூட்டுறவு விற்பனைச் சங்கங்களால் நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

**3.7. தரமான விதைகள் விற்பனை:**

அதிக மகசூல் மற்றும் மேம்பட்ட தரமான வேளாண் உற்பத்திக்கு, தரமான விதைகள் கிடைக்கச் செய்வது மிக இன்றியமையாததாகும். நெல், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், சிறு தானியங்கள் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றின் தரமான விதைகளைக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு விற்பனை செய்து வருகின்றன. 2023-24-ஆம் ஆண்டில், ரூ.2.04 கோடி மதிப்பிலான விதைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**3.8. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் சிறப்பு நடவடிக்கைகள்**

**3.8.1. மின்-வர்த்தகம்:**

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்குச் செய்யப்படும் சேவைகளை மேம்படுத்தும் வகையில், திருச்செங்கோடு,

ஆத்தூர், சேலம், ஈரோடு, பெருந்துறை, அவிநாசி மற்றும் ராசிபுரம் ஆகிய 7 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் வணிக வருவாயை மேம்படுத்தி, விவசாயிகளின் விவசாயப் பொருட்களை மின் வர்த்தகம் மூலம் சந்தைப்படுத்த நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது. பெருந்துறை மற்றும் ஈரோட்டில் மின் வர்த்தகம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

**3.8.2. கோ ஆப் மார்ட்**:

கூட்டுறவு தயாரிப்புகளான தேன், எண்ணெய், மஞ்சள் தூள், மசாலா பொருட்கள் போன்றவற்றை இணையதளம் மூலம் சந்தைப்படுத்த, 06.07.2023 அன்று ஒரு பொதுவான மொபைல் செயலி (CO-OP Mart) தொடங்கப்பட்டு, 31.03.2024 அன்றுள்ளபடி ரூ.3.20 இலட்சம் மதிப்புள்ள 478 ஆர்டர்கள் வழங்கப்பட்டுள்ளன.

**3.8.3. சூரியசக்தி கொப்பரை உலர்கலன்கள்:**

தென்னை விவசாயிகள் பயனுறும் வகையில், 10 மாவட்டங்களில் 28 சூரிய சக்தி கொப்பரை உலர்கலன்கள் நிறுவப்பட்டுள்ளன. இவ்வலகுகள் தேங்காயைக் குறைந்த செலவில், குறைந்த கால அளவில் தரமான கொப்பரையாக மாற்றுகின்றன.

**3.8.4. மின்னணு எடை வசதிகள்:**

விவசாய பெருமக்கள் மற்றும் வணிகர்களின் வேளாண் விளைபொருட்கள் துல்லியமாக எடையிடப்படுவதை உறுதிப்படுத்திட பெருந்துறை, பவானி, உசிலம்பட்டி, நீலகிரி, துறையூர், பரமக்குடி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில், மொத்தம் ரூ.1.42 கோடி மதிப்பீட்டில் மின்னணு எடைப்பாலங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதன் விளைவாக, இந்த மண்டலங்களில் உள்ள விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் பெரிதும் பயனடைந்துள்ளனர்.

### 3.8.5. மின்-ஏலமுறை:

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ஏலத்தினை துரிதமாகவும், ஒளிவுமறைவற்ற முறையிலும் நடத்திட ஏதுவாக சேலம், ஆத்தூர், ஈரோடு, பெருந்துறை மற்றும் திருச்செங்கோடு ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ரூ.43.35 இலட்சம் மதிப்பில் மென்பொருள் பொருத்தப்பட்டு ஏலமுறை நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

### 3.8.6. உலர்களங்கள்:

ஆலங்குடி, திருமயம், அறந்தாங்கி, திருமங்கலம், பென்னாகரம், கமுதி, தென்காசி, அவிநாசி, உடுமலைப்பேட்டை, கள்ளக்குறிச்சி மற்றும் திருச்செங்கோடு (கொங்கணாபுரம் கிளை) ஆகிய 11 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில், வேளாண் பெருமக்களின் விளைபொருட்களை உலரவைத்து, தரம் பிரித்து, ஆதாய விலையில் விற்பதற்கு உதவுகின்றன.

## 3.9. வேளாண் விளை பொருட்களைப் பதனிடுதல் மற்றும் அதன் மதிப்பினைக் கூட்டுதல்:

சில கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் பஞ்சு அரவை அலகுகள், பயறு பதனிடும் அலகுகள், மிளகாய் மற்றும் மஞ்சள் அரவை அலகுகள், குங்குமம் தயாரிக்கும் அலகுகள், எண்ணெய் பிழியும் அலகுகள், அரிசி ஆலைகள், நிலக்கடலை உடைக்கும் அலகுகள், பஞ்சு பொதியிடும் அலகுகள், சாமை, வரகு, புளி பதனிடும் அலகுகள் மற்றும் உறையிடும் அலகுகள் ஆகிய பதனிடும் அலகுகளை நடத்தி வருகின்றன.

3.9.1. தற்போது 80 உலர்களன் அலகுகள் இயங்கி வருகின்றன. இந்த அலகுகள் பண்ணை விளைப் பொருட்களின் மதிப்பினை கூட்டுவதுடன், தங்களின் விளைப்பொருட்களுக்கு சிறந்த விலையினைப் பெற உதவுகிறது.

| வ. எண். | வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் (APCMS) | வர்த்தக பெயர் | பொருட்கள் |
|---|---|---|---|
| 1. | சேலம் | அமிர்தம் | எண்ணெய் வகைகள் |
| 2. | பெருந்துறை | பசுமை | எண்ணெய் வகைகள் |
| 3. | ஈரோடு | மங்கலம் | மஞ்சள் தூள் |
| 4. | திருச்செங்கோடு | அர்த்தநாரீஸ்வரர் | எண்ணெய் வகைகள், குளியல் சோப்பு, பருப்பு வகைகள். |
| 5. | சைதாப்பேட்டை | மருதம் | எண்ணெய் வகைகள் |

தற்போது செயல்படும் 80 பதனிடும் அலகுகளில் 12 அலகுகள் பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. 2023-24-ஆம் ஆண்டில் 4,375 மெ.டன் வேளாண் பொருட்கள் பதனிடப்பட்டுள்ளன.

### 3.10. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் (TCMF):

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மண்டலங்களில்

உள்ள 12 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மண்டல அளவிலான இணையமாக செயல்பட்டு வருகிறது. இவ்விணையம், உரங்கள், விதைகள் மற்றும் வேளாண் கருவிகள் ஆகியவற்றை விநியோகித்து வருகிறது. மேலும், உறுப்பினர்களுக்கு நகைக்கடன் வழங்கி வருவதுடன் அச்சகம் ஒன்றையும் இணையம் நடத்தி வருகிறது. 2023-24-ஆம் ஆண்டில், 29,729 மெட்ரிக் டன் உரங்களை விற்பனை செய்துள்ளது மற்றும் அதன் புரள் வணிகம் ரூ.39.02 கோடி ஆகும்.

**3.11. நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம்(NCMS):**

நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம், நீலகிரி மாவட்டம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியினையும் செயல் எல்லையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இச்சங்கம், விவசாயிகள் விளைவிக்கும் உருளைக்கிழங்கு,

முட்டைகோஸ், காரட், பீட்ரூட் மற்றும் பீன்ஸ் ஆகியவற்றை ஆதாய விலைக்கு விற்பனை செய்வதோடு, விவசாயிகளுக்குத் தேவையான வேளாண் இடுபொருட்களையும் வழங்கி வருகிறது. இச்சங்கத்திற்கு சொந்தமாக, மேட்டுப்பாளையத்தில் உரக்கலவை அலகு ஒன்று உள்ளது. இச்சங்கம் சமையல் எரிவாயு முகமை அலகு ஒன்றையும் நடத்தி வருகிறது. 2023-24-ஆம் ஆண்டில், இச்சங்கத்தின் மொத்த புரள் வணிகம் ரூ.115.74 கோடி ஆகும்.

**3.12. சேமிப்புக் கிடங்குகள்:**

அறுவடைக் காலங்களில் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் விளைபொருட்களை குறைந்த விலைக்கு விற்பனை செய்வதை தவிர்த்து ஆதாய விலைக்கு விற்பனை செய்திடவும், சேமித்து வைத்த விளைபொருட்கள் இழப்புகள் ஏற்படாமல் பாதுகாத்திடவும் தொடக்க வோளண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் வேளாண்மை

உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 5,47,800 மெ.டன் கொள்ளளவு கொண்ட 4,047 கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டு செயல்பாட்டில் இருந்து வருகிறது.

3.12.1. மேலும், இச்சேமிப்பு கிடங்குகளின் மூலம் 2023-24-ஆம் ஆண்டில் 4,051 விவசாயிகள் ரூ.294.73 கோடி மதிப்பிலான 71,184 மெட்ரிக் டன் வேளாண் விளைபொருட்களை ஈடாக வைத்து ரூ.174.32 கோடி தானிய ஈட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 11,129 விவசாயிகள் ரூ.154.77 கோடி மதிப்புள்ள விளைபொருட்களை வாடகைக்கு வைத்து பயன் பெறுகின்றனர்.

3.12.2. தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்களின் நேர்மறை மதிப்புடைய 1,357 கிடங்குகளில் 1,170 கிடங்குகள் இந்திய அரசின் கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்திடம் (WDRA) பதிவு

செய்யப்பட்டுள்ளன. பதிவு செய்யப்பட்ட கிடங்குகளில் சிறு மற்றும் குறு விவசாயிகள் பெற்று பயனடையும் வகையில் 7% வட்டியில் தானிய ஈட்டுக்கடன் வழங்கப்படுகிறது. இந்தியாவிலேயே, அதிக எண்ணிக்கையிலான கூட்டுறவுச் சங்கக் கிடங்குகள் WDRA ஆணையத்திடம் பதிவு செய்யப்பட்டு தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

3.12.3. புதுதில்லியில் நடைபெற்ற கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்தின் (WDRA) தோற்றுவிக்கப்பட்ட நாள் விழாவின்போது, கடந்த இரண்டு ஆண்டுகளாக அதிக எண்ணிக்கையிலான கூட்டுறவுக் கிடங்குகள் அவ்வாணையத்திடம் பதிவு செய்ததற்கான இந்திய அரசின் மேற்படி ஆணையத்தால் தமிழ்நாட்டிற்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

### 3.13. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (TANFED):

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், மாநில அளவிலான தலைமை நிறுவனமாக திகழ்கிறது.

இவ்விணையம், 20.02.1959 அன்று தொடங்கப்பட்டு, தற்போது மாவட்ட அளவில் 18 மண்டலங்களில் செயல்பட்டு வருகிறது.

3.13.1. இவ்விணையம், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகளுக்குத் தேவையான வேளாண் இடுபொருட்களான உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், விதைகள் மற்றும் வேளாண் உபகரணங்கள் ஆகியவற்றை நியாயமான விலையில் விநியோகித்து வருகிறது.

3.13.2. 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அருகே "பாமணி" என்ற இடத்தில், ஒரு நாளைக்கு சராசரியாக 150 டன் உற்பத்தி திறன் கொண்ட கிரானுலேட்டட் NPK உரக் கலவைகளைத் தயாரிப்பதற்காக அதன் சொந்த உரக் கலவை

அலகு ஒன்றை நிறுவியது. இந்த அலகில் உற்பத்தி செய்யப்படும் உரம் பாமணி என்ற வணிக பெயரில் விற்பனை செய்யப்படுகிறது. இது விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. மதுரை, வேலூர், திருச்சி மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் உரக் கலவை அலகுகளையும் TANFED கொண்டுள்ளது. இதில், குறிப்பிட்ட பயிர் கலவைகள் உற்பத்தி செய்யப்படுகிறது. பயிர்களின் மரபணுத் தூய்மையை உறுதி செய்வதற்காக, 2023-24-ஆம் ஆண்டில், ரூ.173.90 இலட்சம் மதிப்பில் சான்றளிக்கப்பட்ட விதைகளை உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டது.

3.13.3. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், 2023-24-ஆம் ஆண்டில் ரூ.846.73 கோடி மதிப்பிலான 4,55,833 மெட்ரிக் டன் உரங்களை விநியோகம் செய்துள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தால் உற்பத்தி செய்யப்படும் பாமணி 17:17:17 என்ற உரக்கலவைக்கு பல

மாவட்டங்களில் விவசாயிகளிடம் நல்ல வரவேற்பு உள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் உர விநியோகம் மற்றும் விற்பனையை 2% விளிம்புத் தொகையில் மட்டுமே மேற்கொண்டு வருகிறது. குறைந்த அளவு இலாபம் இருந்த போதிலும் விவசாயிகள் பாதிக்கப்படுவதை தவிர்க்கவும் உர விற்பனை சந்தையில் விவசாயிகளுக்கு சாதகமான சூழ்நிலை ஏற்படுத்தவும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் உர விற்பனையில் ஈடுபட்டு வருகிறது.

3.13.4. வேப்ப விதைத்தூ , வேப்பம் புண்ணாக்கு, நுண்ணூட்டச்சத்து கலப்பு உரம், உயிரி பூச்சிக்கொல்லிகள் மற்றும் உயிர் உரங்கள் தயாரிப்பில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் ஈடுபட்டு வருகிறது. திண்டுக்கல்லில் உள்ள எரியோட்டில் பயிர் சார்ந்த நுண்ணூட்டச்சத்துக்கள் தயாரிக்கப்படுகிறது.

3.13.5. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் எரியோட்டில் நுண்ணூட்டச் சத்து கலப்பு உரம் உற்பத்தி செய்வதற்கான உற்பத்தி அலகு நிறுவப்பட்டு, கோகோமின், பனன்மின், சுகர்மின், நெல்மின், வெஜ்மின் மற்றும் சிட்ரஸ்மின் ஆகிய கலப்பு உரங்களை உற்பத்தி செய்கிறது. மேலும் இது நீரில் கரையக்கூடிய உரங்களான NPK-19:19:19, கால்சியம், நைட்ரேட், போரான் 20%, SOP, MAP ஆகியவற்றை ஐபிஎல் மூலம் இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு விற்பனை செய்கிறது.

3.13.6. சென்னையில் 3,460 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இரண்டு குளிர்பதனக் கிடங்குகள் மற்றும் 36,140 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 45 கிடங்குகளும் இவ்விணையத்திற்கு சொந்தமாக உள்ளன.

3.13.7. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், ஆதார விலைத் திட்டத்தின்கீழ் தேசிய வேளாண்மை

கூட்டுறவு விற்பனை இணையத்தின் (NAFED) முகவராக தமிழ்நாட்டில் செயல்பட்டு விலை வீழ்ச்சியிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கிறது. தென்னை விவசாயிகளை நெருக்கடியான விற்பனையிலிருந்து பாதுகாக்கும் வகையில், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் பொள்ளாச்சியிலிருந்து 10,000 மட்டை உரித்த தேங்காய்களை கொள்முதல் செய்து, சென்னை மற்றும் காஞ்சிபுரத்தில் உள்ள 4 கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளில் விநியோகம் செய்துள்ளது.

3.13.8. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், அத்தியாவசியப் பொருட்களின் விலை உயரும் போதெல்லாம் சந்தைக் குறுக்கீடு நடவடிக்கையின் மூலம் முக்கிய பங்கு வகிக்கிறது. 2023-24-ஆம் ஆண்டில், அத்தியாவசியப் பொருட்களின் விலையை நிலைநிறுத்த ஏதுவாக, 134 மெ.டன்

வெங்காயம், துவரம் பருப்பு, கொண்டைக்கடலை ஆகியவை நுகர்வோர் நலனுக்காக வழங்கப்பட்டுள்ளன.

3.13.9. ஒரு பன்முக நடவடிக்கையாக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், இந்திய எண்ணெய்க் கழகத்துடன் இணைந்து 8 பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை அலகுகளை தலா ஒன்று வீதம் சென்னை (கோயம்பேடு மற்றும் கோடம்பாக்கம்), கடலூர், திருச்சி, திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் பெட்ரோல் விற்பனை அலகினை நடத்தி வருகிறது. நடப்பாண்டில், இதுவரை ரூ.91.09 கோடி மதிப்பில், 9135.261 கிலோ லிட்டர் அளவிலான பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இணையத்தின் 2023-24-ஆம் ஆண்டிற்கான மொத்த புரள் வணிகம் ரூ.980.05 கோடி ஆகும்.

## இயல் – 4

## சிறப்பு நோக்கங்களுக்கான கூட்டுறவு நிறுவனங்கள்

விவசாயிகள், பழங்குடியினர் மற்றும் **அடித்தட்டு மக்களின் மேம்பாட்டுக்காக கூட்டுறவுச் சங்கங்கள்** தங்களை பல்வேறு துறைகளில் ஈடுபடுத்திக் கொள்கின்றன. இவ்வகையான சிறப்பு நோக்கங்களுக்காக பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள், சலவைத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், வழக்கறிஞர்கள் கடன் சங்கங்கள், கூட்டுறவு அருந்தகங்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் நவீன கட்டுமான பொறியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

### 4.1. பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் இணையம்:

39 பெரும் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களை உறுப்பினர்களாகக் கொண்ட மாநில அளவிலான பெரும்பல நோக்கு கூட்டுறவு சங்கங்களின் இணையம் துவக்கப்பட்டு,

01.11.2022 முதல் செயல்பட்டு வருகிறது. தமிழகத்திலுள்ள பழங்குடியின மக்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு திட்டமிடவும், அதிக வருமானம் மற்றும் அதிக வேலை வாய்ப்புகளை உறுதி செய்யவும், சிறுவனப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்தி, பெரும் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் பல்வேறு செயல்பாடுகளை இவ்விணையம் ஒருங்கிணைக்கிறது.

**4.2. பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் (LAMPS):**

பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மலைவாழ் பழங்குடியின மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் பொருட்டு செயல்பட்டு வருகின்றன. மலைவாழ் மக்களின் வேளாண் உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பை அதிகரித்தல், வேளாண் விளைபொருள் கொள்முதல் குறிப்பாக சிறுதானியங்கள், ஒருங்கிணைந்த கடன் வசதிகள் மூலம் வருவாய் அதிகரித்தல் மலைவாழ் மக்கள் உள்ளிட்ட

அனைவருக்குமான பொதுவிநியோகத் திட்டத்தின்கீழ் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்தல் ஆகியவை பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதான நோக்கங்களாகும். நகைக்கடன் வழங்குதல், சுய உதவிக்குழு கடன் வழங்குதல், பயிர்க்கடன் வழங்குதல், நுகர்வோர் கடன் வழங்குதல், வேளாண் இடுபொருள் விநியோகம், வேளாண் விளைபொருள் விற்பனை, சிறுவனப் பொருட்கள் சேகரிப்பு மற்றும் விற்பனை போன்ற பணிகளையும் இச்சங்கங்கள் மேற்கொண்டு வருகின்றன.

4.2.1. சத்தியமங்கலம் பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திலிருந்து முல்லை தேன், கொல்லிமலை பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திலிருந்து ஓரிலாந்து காபி போன்றவை மேற்கண்ட சங்கத்தால் கொள்முதல் செய்யப்பட்டு செயலாக்கப்படும் பிரபலமான தயாரிப்புகள் ஆகும்.

| வ. எண். | பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் (LAMPS) | வர்த்தகப் பெயர் | பொருட்கள் |
|---|---|---|---|
| 1. | சத்தியமங்கலம் | முல்லை | தேன் |
| 2. | கொல்லிமலை | ஓரிலேண்ட் | காபி பவுடர் |
| 3. | கள்ளக்குறிச்சி | வெள்ளிமலை | வரகு |
| 4. | கள்ளக்குறிச்சி | கிளாக்காடு | புளி |

4.2.2. 2023-24-ஆம் ஆண்டில் பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த புரள் வணிகம் ரூ.399.23 கோடி ஆகும். 2023-24-ஆம் ஆண்டிற்கான சுய உதவிக் குழு கடன் மற்றும் மத்தியக் காலக் கடன் வட்டி மானியம் மற்றும் பங்கு தொகை மானியம் ஆகியவற்றிற்கு ரூ.5.25 கோடி பழங்குடியினர் துணைத்திட்டத்தின்கீழ் பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**4.3. தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்:**

உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பினை ஒப்பந்தப் பணிகள் மூலம் உறுதி செய்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு, தமிழ்நாட்டில் 63 தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் 18,319 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன.

**4.4. துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் லிட்., (TUCAS):**

துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம், கோயம்புத்தூர் மாவட்டம், துடியலூரில் செயல்பட்டுவரும் ஒரு சிறப்பு வகை தொடக்க விவசாயக் கூட்டுறவு நிறுவனமாகும். வேளாண் இடுபொருட்களை விவசாயிகளுக்கு வழங்குவதுடன், உரங்கள், பூச்சி மருந்துகள், விதைகள் மற்றும் வேளாண் கருவிகளை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி வருகிறது. இந்நிறுவனம் பயிர்க்கடன், அடமானக்கடன் மற்றும் நகைக்கடன் போன்ற கடன்களை உறுப்பினர்களுக்கு வழங்கி

வருகிறது. 2023-24-ஆம் ஆண்டில், ரூ.81.42 இலட்சம் மதிப்பிற்கு விதைகளை விற்பனை செய்ததுடன், ரூ.446.96 இலட்சம் மதிப்பிற்கு வேளாண் உபகரணங்களை பிற கூட்டுறவு நிறுவனங்களுக்கு விற்பனை செய்துள்ளது.

4.4.1. துடியலூர் கூட்டுறவு வேளாண்மை ஸ்தாபனம் நிறுவனம் கடந்த 9 ஆண்டுகளாக தொடர்ந்து தனது உறுப்பினர்களுக்கு நிகர லாபத்தில் 20% ஈவுத்தொகையாக அறிவித்துள்ளது.

**4.5. கூட்டுறவு அச்சகங்கள்**:

தமிழ்நாட்டில் 26 கூட்டுறவு அச்சகங்கள் 12,088 உறுப்பினர்களுடனும் ரூ.2.67 கோடி பங்குத் தொகையுடனும் மாவட்ட அளவில் செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவு அச்சகங்கள் கூட்டுறவு நிறுவனங்களின் அச்சுத் தேவையை பூர்த்தி செய்கின்றன. மேலும், அரசு, அரசு சார்பு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்பு மற்றும் தனியாரிடமிருந்து பெறப்படும்

அச்சுப்பணிகளையும் நிறைவேற்றி வருகிறது. இவ்வச்சகங்கள் 2023-24-ஆம் ஆண்டில் ரூ.75.66 கோடி அளவிற்கு புரள்வணிகம் நடைபெற்றது.

4.5.1. கூட்டுறவு அச்சகங்களை தன்னிறைவு பெற்ற அச்சக நிறுவனங்களாக செயல்படுத்த அனைத்து முனைப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. பெரும்பான்மையான கூட்டுறவுச் சங்கங்களில் கணினிமயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து அவ்வச்சகங்களில் கணினி எழுதுபொருள் அச்சிடப்பட்ட படிவங்கள் நவீனமுறையில் தயாரிக்கும் வசதியினை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## இயல் - 5

## நுகர்வோர் கூட்டுறவுகள்


கூட்டுறவு சங்கங்கள் பல்வேறு விதமான கடன் மற்றும் சேவைகளுடன் நுகர்வோருக்குத் தேவையான தரமான நுகர்வுப் பொருட்களை நியாயமான விலையில் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றன.

நுகர்வோர் கூட்டுறவுகள் சந்தை குறுக்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வெளிச்சந்தையில் உள்ள நுகர்பொருட்களின் விலை உயர்வினைக் கட்டுப்படுத்துவதில் பெரும்பங்காற்றி பொதுமக்களுக்கு சேவை செய்து வருகின்றன.

திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம் (Triplicane Urban Cooperative Society) 1904-ஆம் ஆண்டு ஏப்ரல் 9-ஆம்

தேதி தமிழ்நாட்டில் முதலாவது நுகர்வோர் கூட்டுறவு சங்கமாக தொடங்கப்பட்டது.

தமிழ்நாட்டில், நுகர்வோர் கூட்டுறவு அமைப்பானது மூன்றடுக்கு அமைப்பினை கொண்டுள்ளது.




**5.1. தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள்:**

தொடக்க நிலையில், தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள் பொதுமக்களுக்கு அத்தியாவசிய நுகர்பொருட்களை நியாயமான விலையில் வழங்குவதை முக்கிய நோக்கமாக கொண்டு செயல்பட்டு வருகின்றன.


5.1.1. தமிழ்நாட்டில், 1919-ஆம் ஆண்டு கொடைக்கானல் கூட்டுறவு பண்டகசாலை தொடங்கப்பட்ட முதல் தொடக்க கூட்டுறவு பண்டகசாலையாகும்.

5.1.2. தமிழ்நாட்டில் 320 தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகளால் 51 கூட்டுறவு மருந்தகங்கள், 19 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள், 5 பெட்ரோல் விற்பனை நிலையங்கள், 3 அரவை அலகுகள், 100 பல்பொருள் அங்காடிகள், 14 சுயசேவை அலகுகள் மற்றும் 1,793 நியாயவிலைக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகளின் நுகர்பொருள் விற்பனை செயல்பாடுகள்:-**

**(ரூ.கோடியில்)**

| கூட்டுறவு நிறுவனத்தின் வகை | நுகர்பொருட்களின் விற்பனை மதிப்பு | | |
|---|---|---|---|
| | 2021-22 | 2022-23 | 2023-24 |
| தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள் | 293.56 | 299.69 | 333.47 |




## 5.2. மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள்:

மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மத்திய நிலை கூட்டுறவுச் சங்கங்களாக மாவட்ட அளவில் செயல்பட்டு வருகின்றன.

5.2.1. மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் தயாரிப்பு நிறுவனங்கள், உற்பத்தி மையங்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் கூட்டுக் கொள்முதல் குழு மூலம் மளிகைப்பொருட்கள், தானியங்கள், பருப்பு வகைகள் மற்றும் மசாலாப் பொருட்களை

மொத்தமாகவும், நேரடியாகவும் கொள்முதல் செய்து நியாயமான விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்து வருகின்றன.

5.2.2. மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் முதன்மைச் சங்கங்கள் மற்றும் சுயநகர்வு சங்கங்களாகவும் செயல்பட்டு அத்தியாவசியப் பொருட்களை நியாய விலைக்கடைகளுக்கு நகர்வு செய்து பொது விநியோகத் திட்டத்தினைச் சிறப்பான முறையில் செயல்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.


5.2.3. சென்னையில் ஒரு மத்திய கொள்முதல் குழுவும், சென்னை, மதுரை, சேலம் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் 4 மண்டல கூட்டுக்கொள்முதல் குழுக்களும் செயல்பட்டு வருகின்றன. இக்குழுக்கள் மளிகைப் பொருட்களை மொத்தக் கொள்முதல் செய்வதன் மூலம் இலாபகரமான விலையின் பயனை (Attractive price

advantage) உறுப்பினர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் வழங்கி வருகின்றன.

5.2.4. தமிழ்நாட்டில் தற்போது 45 மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், 38 மாவட்டங்களில் செயல்படுகின்றன. மாநிலம் முழுவதும் அமைந்துள்ள 45 மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு விற்பனை பண்டகசாலைகளால் 24 பல்பொருள் அங்காடிகள், 209 சிறுபல்பொருள் அங்காடிகள், 13 சில்லறை விற்பனை நிலையங்கள், 51 சுயசேவை பிரிவுகள், 136 கூட்டுறவு மருந்தகங்கள், 38 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள், 26 பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்கள், 26 சமையல் எரிவாயு உருளை விநியோக அலகுகள், 3406 நியாய விலைக்கடைகள் மற்றும் 80 மண்ணெண்ணெய் வழங்கும் மையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

5.2.5. திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களில் பழமையான ஒன்றாகும். 1904-இல் துவங்கப்பட்ட இந்நுகர்வோர் கூட்டுறவு நிறுவனம் பொதுமக்களின் நுகர்வுத் தேவைகளை நிறைவு செய்வதில் முன்னோடியாக விளங்குகிறது.

5.2.6. 2023-2024-ஆம் ஆண்டில் அனைத்து நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மூலம் ரூ.1,360.13 கோடி அளவிற்கு வியாபாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



### 5.3. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் (TNCCF):


தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் மாநிலத்தில் உள்ள அனைத்து நுகர்வோர் கூட்டுறவுகளின் தலைமை நிறுவனமாகும். இணைப்புச் சங்கங்களை ஒருங்கிணைத்து, அவற்றின் செயல்பாட்டிற்குத் துணைபுரியும் விதமாக அதிகமாக விற்பனையாகக்கூடிய நுகர்பொருட்களை மொத்தமாகக் கொள்முதல் செய்து, இணைப்புச் சங்கங்களுக்கு விநியோகம் செய்வது தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் முக்கிய நோக்கமாகும். காகிதம் மற்றும் எழுதுபொருட்கள், அதிகமாக விற்பனையாகக்கூடிய நுகர்பொருட்கள் (FMCG) ஆகியவற்றை தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் மொத்தமாகக் கொள்முதல் செய்து அவற்றை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள் மற்றும் கூட்டுறவு அச்சகங்களுக்கு விற்பனை செய்கிறது.

விழாக்காலங்களில், கூட்டுறவு நிறுவனங்களுக்கான பட்டாசு கொள்முதலுக்கு தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் ஒருங்கிணைப்பாளராக செயல்படுகிறது. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் இரண்டு பெட்ரோல் மற்றும் டீசல் சில்லறை விற்பனை நிலையங்களையும் நடத்திவருகிறது.

5.3.1. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், ஜூலை 2009 முதல் இந்துஸ்தான் யூனிலீவர் லிமிடெட் (HUL) நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) ஏற்படுத்திக்கொண்டு உறுப்பினர் சங்கங்களுக்கு அதிகமாக விற்பனையாகக் கூடிய HUL நுகர்பொருட்களை கொள்முதல் செய்து வழங்கி வருகிறது. மேலும், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் பிப்ரவரி 2022 முதல் மைய மருந்து கொள்முதல் நடவடிக்கையை மேற்கொண்டுவருகிறது.

5.3.2. 2021-22-ஆம் ஆண்டில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தால் ரூ.57.09 கோடி அளவிற்கும்,

2022-23-ஆம் ஆண்டில் ரூ.84 கோடி அளவிற்கு மற்றும் 2023-24-ஆம் ஆண்டில் ரூ.85 கோடி அளவிற்கும் மொத்த விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.




**5.4. கூட்டுறவு மருந்தகங்கள்:**

பொதுமக்களுக்கு தரமான மருந்துகளை குறைவான விலையில் விற்பனை செய்வதை முக்கிய நோக்கமாகக் கொண்டு, தமிழ்நாட்டில் 381 இடங்களில் கூட்டுறவு மருந்தகங்கள் கீழ்குறிப்பிட்டுள்ள பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டு வருகிறது.

| வ. எண். | கூட்டுறவு நிறுவனத்தின் பெயர் | மொத்தம் |
|---|---|---|
| 1 | மொத்த விற்பனை பண்டகசாலைகள் | 136 |
| 2 | கூட்டுறவு விற்பனை சங்கங்கள் | 110 |
| 3 | தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள் | 51 |
| 4 | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் | 62 |
| 5 | நகர கூட்டுறவு கடன் சங்கம் | 16 |
| 6 | உழவர் பணி கூட்டுறவு சங்கம் | 1 |
| 7 | பெரும் பலநோக்கு கூட்டுறவு சங்கம் | 2 |
| 8 | தொடக்க கூட்டுறவு நில வள வங்கி | 1 |
| 9 | அ.ச.பழனிசாமி நாடார் சுகாதார கூட்டுறவு சங்கம், விருதுநகர் | 1 |
| 10 | பல்சேவை மையமான தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் (ஜன் ஔஷதி கேந்திரா) | 1 |
| | மொத்தம் | 381 |

இக்கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் 2023-2024-ஆம் ஆண்டில், ரூ.163 கோடி மதிப்பிலான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

5.4.1. கூட்டுறவு மருந்தகங்களில் வாடிக்கையாளர்களுக்கு 20% வரை தள்ளுபடி

வழங்கப்படுகிறது. நடப்பு நிதியாண்டில் ரூ.25 கோடி அளவிற்கு 30 இலட்சம் வாடிக்கையாளர்களுக்கு தள்ளுபடி வழங்கப்பட்டுள்ளது.

**5.5. மைய மருந்து கொள்முதல்:**

கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் மருந்தகங்களுக்கு, மருந்து நிறுவனங்களின் உள்ளூர் மருந்து விற்பனையாளர்களிடமிருந்து மருந்துப்பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. இவ்வாறு ஒவ்வொரு மருந்தகமும், தனித்தனியே மருந்து பொருட்களை கொள்முதல் செய்ததால் குறைவான விளிம்பு மருந்து விற்பனையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றது. இதனால் பொதுமக்களுக்கு அதிக தள்ளுபடி வழங்க இயலவில்லை.

5.5.1. பொதுமக்களுக்கு அதிக தள்ளுபடி கிடைக்கப்பெறுவதற்கு ஏதுவாக மைய மருந்து கொள்முதல் திட்டம் கொண்டு வரப்பட்டு, தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு

இணையம் முதன்மை நிறுவனமாக (Nodal Agency) செயல்பட்டு வருகிறது. 21 முன்னணி மருந்து தயாரிப்பு நிறுவனங்களுடன் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் (TNCCF) புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு மருந்துகளை நேரடியாகக் மருந்து தயாரிக்கும் நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்வதனால் கிடைக்கப்பெறும் கூடுதல் விளிம்பு பொது மக்களுக்கு தள்ளுபடியாக வழங்கப்படுகிறது.

5.5.2. மையமருந்து கொள்முதல் திட்டத்தின் மூலம் 2023-24-ஆம் ஆண்டில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் ரூ.4 கோடி மதிப்பிற்கு மருந்துகள் விற்பனை செய்துள்ளது.

**5.6. சந்தை குறுக்கீடு நடவடிக்கை:**

அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கான சூழல் மற்றும் தேவை ஏற்படும்போது

நுகர்வோர் கூட்டுறவுகள் சந்தை குறுக்கீடு நடவடிக்கையில் ஈடுபடுகின்றன. 2023-24-ஆம் நிதி ஆண்டில் தக்காளி மற்றும் வெங்காயத்தின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த கூட்டுறவுத் துறையால் சந்தை குறுக்கீடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

5.6.1. 2023 ஜூலை மற்றும் ஆகஸ்டு மாதங்களில் தக்காளியின் விலை கிலோ ரூ.160 வரை உயர்ந்தது. ஏறத்தாழ 70 நாட்களுக்கு தக்காளியின் விலை உயர்வை கட்டுப்படுத்தும் விதமாக, கூட்டுறவுத் துறை நடத்தும் 63 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள், 2 நகரும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் 500 நியாயவிலைக் கடைகள் மூலம் சந்தை குறுக்கீட்டு நடவடிக்கையாக, 472 மெ.டன் தக்காளி கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. இதனால் தக்காளியின் வெளிச்சந்தை விலை கட்டுக்குள்

கொண்டுவரப்பட்டு ஐந்து இலட்சம் குடும்பங்கள் பெரிதும் பயனடைந்தனர்.

5.6.2. 2023 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் வெளிச்சந்தையில் வெங்காயத்தின் விலை உயர்ந்து காணப்பட்டது. சந்தை குறுக்கீட்டு நடவடிக்கையாக வெங்காயத்தின் விலை உயர்வை கட்டுப்படுத்த கூட்டுறவு துறையின் கீழ் செயல்படும் 63 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் 2 நகரும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் 53 மெ.டன் வெங்காயத்தினை TANFED மூலம் கொள்முதல் செய்து விற்பனை செய்ததால் பத்தாயிரம் குடும்பங்கள் பயன்பெற்றுள்ளனர்.

**5.7. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்:**

"**முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம்**" அரசு தொடக்கப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு சத்தான காலை உணவு

வழங்குவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15.09.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 2023-24-ஆம் ஆண்டு வரை, ரூ.35.65 கோடி மதிப்பிலான 2,366 மெ.டன் இருமுறை வறுக்கப்பட்ட ரவை, 1,604 மெட்ரிக் டன் கோதுமை ரவை மற்றும் 1,948 மெட்ரிக் .டன் சேமியா உள்ளிட்ட பொருட்கள் 28,397 அரசு தொடக்கப்பள்ளிகளில் பயிலும் 15,40,658 மாணவ மாணவியர்களுக்கு காலை உணவு தயாரிக்க மதிய உணவு மையங்களுக்கு நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

**5.8. கட்டடங்கள் கட்டுமானம்:**

கோயம்புத்தூர் மண்டலத்தில் பொள்ளாச்சி நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, சென்னையில் பூங்காநகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை மற்றும் டி.யு.சி.எஸ்., ஆகியவற்றால் அவற்றின் வியாபார

அபிவிருத்தி காக ரூ.675.10 இலட்சம் மதிப்பிலான அலுவலக கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. திருவண்ணாமலை மண்டலத்தில், திருவண்ணாமலை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்கு ரூ.40.00 இலட்சம் மதிப்பில் கிடங்கு கட்டப்பட்டுள்ளது.

**5.9. புதுப்பித்தல் பணிகள்:**

மதுரை மாவட்ட பாண்டியன் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட சிந்தாமணி நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, திருவண்ணாமலை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை ஆகியவற்றால் ரூ.51.5 இலட்சம் மதிப்பிற்கு முறையே சுயசேவைப்பிரிவு, எரிவாயு பிரிவு மற்றும் கிடங்கு புதுப்பித்தலும் மற்றும் பொட்டலமிடும் இயந்திரம் நிறுவுதலும் நிறைவுற்றது.

## இயல் - 6

## உணவு பாதுகாப்பில் கூட்டுறவு

இந்தியாவிலுள்ள மாநிலங்களுள் தமிழ்நாட்டில் அனைவருக்குமான பொதுவிநியோகத் திட்டம் மூலம் பொதுமக்களுக்கு உணவு பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது. பொது விநியோகத் திட்டப் பொருட்களை பொது மக்களுக்கு விநியோகிக்க ஏதுவாக கூட்டுறவு சங்கங்கள் மாநிலம் முழுவதும் 24,537 முழு நேர மற்றும் 10,030 பகுதி நேர நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன. இது மாநிலத்தில் உள்ள மொத்த நியாய விலைக் கடைகளில் 99.37% .

| | | |
|---|---|---|
| i) | மொத்த நியாயவிலைக் கடைகள் | 34,567 |
| | முழுநேர நியாயவிலைக் கடைகள் | 24,537 |
| | பகுதி நேர நியாய விலைக்கடைகள் | 10,030 |
| ii) | மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் | 240 |
| iii) | நகரும் நியாய விலைக் கடைகள் | 2,699 |

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளிலிருந்து அரிசி, சர்க்கரை மற்றும் கோதுமை ஆகிய அத்தியாவசியப் பொருட்களையும், துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகிய சிறப்புப் பொது விநியோகத் திட்டப் பொருட்களையும் 97 முதன்மைச் சங்கங்கள் மற்றும் 333 சுயஎடுப்பு கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் நியாய விலைக் கடைகளுக்கு நகர்வு செய்து வருகின்றன. இந்த முதன்மைச் சங்கங்கள் 4,176 இணைப்புச் சங்கங்கள் நடத்தும் நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை நகர்வு செய்து வருகின்றன.

**நகர்வு செய்யும் சங்கங்களின் வகைப்பாடு:-**

| வ. எண் | சங்கங்கள் | சங்கங்களின் எண்ணிக்கை | சங்கங்களில் இணைக்கப்பட்டுள்ள நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| i) | முதன்மைச் சங்கங்கள் | 97 | 4,496 |
| ii) | சுய எடுப்புச் சங்கங்கள் | 333 | 4,195 |

| | | | |
|---|---|---|---|
| iii) | இணைப்புச் சங்கங்கள் | 4,176 | 25,876 |
| | **மொத்தம்** | **4,606** | **34,567** |

**6.1. கூட்டுறவு நியாய விலைக் கடைகள்:**

கூட்டுறவு சங்கங்களினால் நடத்தப்படும் 34,567 நியாய விலைக் கடைகளின் மூலம் மாநிலத்திலுள்ள 2,11,34,697 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொது விநியோகத்திட்டப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. அத்தியாவசியப் பொருட்கள், சிறப்பு பொது விநியோகத் திட்டப் பொருட்கள் மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்களான ஊட்டி டீ, அரசு உப்பு, பனை வெல்லம், சிறுதானியங்கள், 5 கிகி / 2 கிகி FTL சிலிண்டர்கள் முதலியவை நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. சிறப்புப் பொது விநியோகத் திட்டப் பொருட்களான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவை அரசு வழங்கும் மானிய விலையில் நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. கூட்டுறவு சங்கங்கள் மூலம் நடத்தப்பட்டு வரும் 240 மண்ணெண்ணெய் வழங்கும்

நிலையங்கள் மூலம் மாநிலத்திலுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுகின்றது.

**6.2. நகரும் நியாய விலைக் கடைகள்:**

மலை பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினர், தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் நியாய விலைக் கடைகளிலிருந்து வெகு தொலைவில் அல்லது இயற்கை தடைகளான ஆறுகள், மலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளால் தனிமைப்படுத்தப்பட்ட குடியிருப்புகளில் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்களுக்கு அவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கே சென்று அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு, மாநிலம் முழுவதும், 2,699 நகரும் நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன.

6.2.1. தருமபுரி, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள தொலைதூரப் பகுதிகள் மற்றும்

வாகனங்கள் செல்ல இயலாத மலைப்பாங்கான பகுதிகளில் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு மட்டக் குதிரைகள் மற்றும் கோவேறு கழுதைகளையும் ஈடுபடுத்த கூட்டுறவுத் துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 6.3. நியாய விலைக் கடைகளில் இதர பொருட்களின் விற்பனை:

#### 6.3.1. 5 கிகி / 2 கிகி FTL (Free Trade LPG ) சிலிண்டர்கள் விற்பனை:

நியாய விலைக் கடைகளில் 5 கிகி / 2கிகி FTL சிலிண்டர்களின் சில்லறை விற்பனை, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் / இந்துஸ்தான் பெட்ரோலியம் லிமிடெட் (IOC/HPCL) நிறுவனங்கள் விதித்துள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மாநிலத்திலுள்ள புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் தள்ளுவண்டியில் வியாபாரம் செய்பவர் உள்ளிட்டோர் பெரிதும் பயன்பெறும் வகையில் தொடங்கப்பட்டுள்ளது. FTL சிலிண்டர் பெறுவதற்கு

குடியிருப்பிற்கான சான்றிதழ் அளிக்கப்பட வேண்டிய அவசியமில்லை. அக்டோபர் 2022 முதல் மார்ச் 2024 வரை ரூ.40.63 இலட்சம் மதிப்புள்ள சிலிண்டர்கள் நியாய விலைக் கடைகளின் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**6.3.2. சிறுதானியங்கள் விற்பனை:**

வேளாண் துறைக்கான 2021-22-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிவிப்பினைத் தொடர்ந்து, கேழ்வரகு, கம்பு, தினை, குதிரைவாலி, சாமை மற்றும் வரகு ஆகிய சிறுதானியங்கள், வேளாண்விற்பனை மற்றும் வேளாண் தொழிற்துறையின் கீழ் செயல்பட்டு வரும் உழவர் உற்பத்தியாளர்கள் அமைப்புகளினால் (FPOs) கொள்முதல் செய்யப்படுகின்றன. இது முன்னோடித் திட்டமாக, சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்களில் கூட்டுறவுகள்/தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நடத்தப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட நியாய விலைக் கடைகள் / சில்லறை விற்பனை நிலையங்களில், விற்பனை செய்யப்பட்டு

வருகின்றன. ஜுன் 2022 முதல் மார்ச் 2024 வரை ரூ.119.25 இலட்சம் மதிப்பிலான சிறுதானியங்கள் நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**6.3.3. பனைவெல்லம் விற்பனை:**

வேளாண் துறைக்கான 2021-22-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிவிப்பினைத் தொடர்ந்து, காதி மற்றும் கிராமத் தொழில் வாரியத்தால் கொள்முதல் செய்யப்படும் பனை வெல்லம் மாநிலம் முழுவதும் கூட்டுறவு சங்கங்களால் நடத்தப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட நியாய விலைக் கடைகளில் "***கற்பகம்***" என்ற வணிகப் பெயரில் விற்பனை செய்யப்படுகின்றது. அக்டோபர் 2021 முதல் மார்ச் 2024 வரை ரூ.162.15 இலட்சம் மதிப்பிலான பனை வெல்லம் நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**6.3.4. அரசு உப்பு விற்பனை:**

தமிழ்நாடு உப்பு நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படும் அயோடின் கலந்த உப்பு அயோடின் பற்றாக்குறையினால்

ஏற்படும் குறைபாடுகளிலிருந்து பொது மக்களை பாதுகாக்கும் நோக்கத்தோடு, கூட்டுறவு சங்கங்கள் மூலம் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது. 2000-01 முதல் 2023-24 வரை 5,33,223 மெட்ரிக் டன் உப்பு, கூட்டுறவு சங்கங்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**6.3.5. ஊட்டி டீத்தூள் விற்பனை:**

நீலகிரி மாவட்டத்திலுள்ள சிறு தேயிலை விவசாயிகளின் வாழ்வாதாரம் மற்றும் நிதி நிலைமையை மேம்படுத்தும் நோக்கத்தோடு, "**இண்ட்கோசர்வ்**" நிறுவனம் (The Tamilnadu Small Tea Growers' Industrial Cooperative Tea Factories' Federation Ltd.,) சிறுதேயிலை விவசாயிகள் உற்பத்தி செய்யும் தேயிலையினை கொள்முதல் செய்து, நியாய விலைக் கடைகள் மூலம் "**ஊட்டி டீ**" என்ற வணிகப் பெயரில் (Brand Name) பொதுமக்களுக்கு விற்பனை செய்து வருகின்றது. 2001-02 முதல் 2023-24 வரை 61,450 மெட்ரிக் டன்

ஊட்டி டீத்தூள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளின் வழியாக விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**6.4.கூட்டுறவு நியாய விலைக் கடைகளை நவீனமயமாக்குதல்:**

**6.4.1. நியாயவிலைக் கடைகளுக்கு ISO தரச்சான்றிதழ்:**

நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு சிறந்த சேவை வழங்கப்படுவதை உறுதி செய்யும்பொருட்டு, கூட்டுறவுத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் நியாய விலைக் கடைகளுக்கு தர மேலாண்மை தொடர்பான (Quality Management System) ISO:9001 தரச்சான்றிதழினையும், Security in Supply Chain Management and Storage-க்கான ISO:28000 தரச்சான்றிதழினையும் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

31.03.2024 வரை 9,356 நியாய விலைக் கடைகளுக்கு ISO:9001 சான்றிதழும், 2,059 நியாய விலைக் கடைகளுக்கு ISO:28000 சான்றிதழும் பெறப்பட்டுள்ளன.

**6.4.2. நியாய விலைக் கடைகளை பொலிவூட்டுதல்:**

மாநிலம் முழுவதிலும் உள்ள நியாய விலைக் கடைகளை பொலிவுறச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை 4,466 நியாய விலைக் கடைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

**6.4.3. புதிய நியாய விலைக் கடைகளைத் திறத்தல்:**

பொது மக்களுக்கு உரிய காலத்தில் அத்தியாவசியப் பொருட்கள் சீரான முறையில் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்திட மாநிலம் முழுவதும் மே 2021 முதல் மார்ச் 2024 வரை 511 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 993 பகுதி நேர நியாய விலைக் கடைகள் உட்பட மொத்தம் 1,504 புதிய நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

**6.5. நியாயவிலைக் கடைகளில் விற்பனையாளர்கள் / கட்டுநர்கள் காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்ட விவரம்:**

5,384 விற்பனையாளர்கள் மற்றும் 981 கட்டுநர்கள் காலிப்பணியிடம் நிரப்பப்பட்டுள்ளது. இதன் மூலம் நியாயவிலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் தடையின்றி விநியோகம் செய்யப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

**6.6. திட்டங்களை ஒருங்கிணைத்து நியாய விலைக் கடைகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டுதல்:**

தனியார் வாடகை கட்டடங்களில் செயல்பட்டு வரும் 7,283 நியாய விலைக் கடைகளுக்கு இலவசமாக காலியிடம் கிடைக்கும் இடங்களில் புதிய கட்டடங்கள் கட்டப்படுவதற்கு அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக நியாய விலைக் கடைகளுக்கு சொந்த கட்டடங்கள் படிப்படியாக கட்டப்பட்டு வருகிறது. நியாய விலைக் கடைகளுக்கு கட்டடம் கட்ட அடையாளம் காணப்பட்டுள்ள மொத்தமுள்ள 1,784

இடங்களில், 1,283 இடங்களுக்கு அனுமதியின் பேரில் உள்ளிட (Enter upon permission) அனுமதியும், 1,189 இடங்களுக்கு நிர்வாக அனுமதியும் (Administrative Sanction) சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களால் அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 488 நியாய விலைக்கடைகளுக்கு கட்டடம் முழுவதுமாக கட்டி முடிக்கப்பட்டுள்ளது மற்றும் இதர 701 இடங்களில் கட்டுமானப் பணி தொடங்கப்பட்டு பல்வேறு நிலைகளில் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

6.6.1. மாநிலம் முழுவதும், மே 2021 முதல் மார்ச் 2024 வரை, 298 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 172 பகுதி நேர நியாய விலைக் கடைகள் ஆக மொத்தம் 470 நியாய விலைக்கடைகளுக்கு சொந்த கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

**6.7. புதிய நியாய விலைக் கடைகளை சீரான வடிவமைப்பில் கட்டுதல்:**

மாநிலம் முழுவதும், புதிய நியாய விலைக் கடைகள் கட்டுவதற்கு, பின்வரும் இரண்டு தனித்துவமான கட்டட வடிவமைப்புகளுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

1. 500 க்கும் குறைவான குடும்ப அட்டைகளுடன் இயங்கும் நியாய விலைக் கடைகளுக்கு 440 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டடங்கள் 7.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவும்,
2. 500 க்கும் கூடுதலான குடும்ப அட்டைகளுடன் இயங்கும் நியாயவிலைக் கடைகளுக்கு 550 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டடங்கள் 10.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

ஏறத்தாழ 800 புதிய நியாய விலைக் கடைகளுக்கான கட்டுமானப் பணிகள் MGNREGA, MLACDS / MPLADS, PACCS as MSC, அண்ணா மறுமலர்ச்சி திட்டம், உள்ளாட்சி அமைப்புகளின் நிதி உள்ளிட்ட பல்வேறு நிதியுதவிகளின் வாயிலாக மேற்கொள்ளப்படுகின்றன.

### 6.8. நியாய விலைக் கடைகளை பொருளாதார ரீதியாக மேம்படுத்த முன்னெடுக்கப்படும் முயற்சிகள்:

நியாய விலைக் கடைகளைப் பொருளாதார ரீதியாக மேம்படுத்திட

- ஊட்டி டீ , அரசு உப்பு, காதி பொருட்கள்
- கூட்டுறவு தயாரிப்புகள்
- அதிக விற்பனையாகும் பிராண்டட் நுகர்பொருட்கள் (FMCGs)
- 5 கிகி / 2 கிகி FTL சிலிண்டர்கள்

உள்ளிட்டவற்றை நியாய விலைக் கடைகளின் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 6.9. பொதுவிநியோகத் திட்டத்தில் மேம்படுத்தப்பட்ட மின்னணு மேலாண்மை:

#### 6.9.1. காலிக்கோணிகளை எம்.எஸ்.டி.சி. (Metal Scrap Trading Corporation Ltd.,) (MSTC) / National Co-operative Dairy Federation of India (NCDFI) மூலம் விற்பனை:

காலிக்கோணிகளின் விற்பனையில் வெளிப்படைத்தன்மை மற்றும் அதிக விற்பனை விலை

கிடைக்கப்படுவதை உறுதி செய்யும் நோக்கத்தோடு, காலி சணல் கோணிகள், MSTC / NCDFI இணையதளத்தின் மின்னணு-ஏல தளம் மூலம் விற்பனை செய்யப்படுகின்றது. காலி சணல் கோணிகளின் விவரங்கள் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்படுவதால், மின்னணு-ஏலம் வெளிப்படையான முறையில் நடைபெறுவதை இது உறுதி செய்கின்றது. MSTC-யின் மின்னணு-ஏல தளத்தின் வாயிலாக 31.03.2024 வரை மொத்தம் 42,66,28,576 காலி சணல் கோணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**6.9.2. விற்பனை முனைய இயந்திரம் (PoS Device):**

நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்களின் விற்பனை உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளும் விற்பனை முனைய இயந்திரம் (PoS Device) வழியாக மேற்கொள்ளப்படுவதால் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்படுகிறது. மேலும்

குடும்ப அட்டைதாரர்கள் பெறும் பொருட்களுக்கான ஒப்புதல் அவர்களது பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தியாக அனுப்பப்படுகிறது.

**6.9.3. குடும்ப அட்டைதாரர்களுக்கு விரல் ரேகை பதிவுமுறை (Biometric) மூலம் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம்:**

நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் விரல் ரேகை பதிவு (Biometric) முறை மூலம் வழங்கப்படுவதால், உரிய பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்டங்கள் சென்றடைவது உறுதி செய்யப்படுகிறது.

**6.9.4. மின்னணு எடையிடும் இயந்திரம்:**

கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்கள் சரியான எடையில் அத்தியாவசியப் பொருட்களை பெறுவதற்கு ஏதுவாக, அனைத்து நியாய

விலைக் கடைகளிலும் மின்னணு தராசுகள் பயன்படுத்தப்படுகிறது.

**6.9.5. நியாய விலைக் கடைகளில் மின்-பரிவர்த்தனை (e-payment) வசதி:**

அனைத்து நியாய விலைக் கடைகளிலும், GPay, BHIM, PhonePe போன்ற ஒருங்கிணைந்த பரிவர்த்தனை இடைச்செயலிகள் மூலம் மின்-பரிவர்த்தனை சேவைகளை படிப்படியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**6.10. பல்சேவை மையங்களான தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கீழ் செயல்படும் நியாய விலைக் கடைகளில் மேம்படுத்தப்பட்ட சேமிப்பு வசதிகள்:**

பல்சேவை மையங்களான தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கீழ் பின்வரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:-

- மேம்படுத்தப்பட்ட உணவு தானிய சேமிப்பு வசதி
- அத்தியாவசியப் பொருட்களை சேமித்து வைப்பதற்கும் விநியோகம் செய்வதற்கும் துருப்பிடிக்காத எஃகு

கொள்கலன்களை (Stainless Steel Containers) பயன்படுத்துதல்

- பொது விநியோகத் திட்டப் பொருட்களை நகர்வு செய்திட வாகனங்கள்

**6.11. பொது விநியோகத் திட்ட வழித்தட சீரமைப்பு:**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கிலிருந்து நியாய விலைக்கடைகளுக்கு அத்தியாவசிய பொருட்களை நகர்வு செய்யும் பணிக்கு பின்பற்றப்படும் பயண வழித்தடங்களின் தூரத்தினை குறைப்பதன் வாயிலாக போக்குவரத்து செலவினங்களை குறைக்க ஏதுவாக இந்திய அரசால் முன்மொழியப்பட்ட மேம்படுத்தப்பட்ட 1,871 பயண வழித்தடங்கள் 01.03.2024 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

**6.12. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்:**

குடும்பத் தலைவிகளான மகளிர்களுக்கு மாதாந்திர ரூ.1,000/- வழங்கும் நாட்டிலேயே மிகப்பெரிய திட்டத்திற்கான

விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து கூட்டுறவுத் துறையினரால் பெறப்பட்டது மற்றும் குடும்ப அட்டை எண், முகாம் நடைபெறும் இடம், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை முகாமில் சமர்ப்பிக்கும் தேதி மற்றும் நேரம் போன்ற விவரங்களை கூட்டுறவு நியாய விலைக் கடை விற்பனையாளர்களால் குடும்ப அட்டைதாரர்களின் வீட்டிற்கு நேரடியாக சென்று நிரப்பப்பட்டு வழங்கப்பட்டன. அனைத்து நியாய விலைக் கடைகளிலும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் பற்றிய தகவல் பலகை நிறுவப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, முகாம் நடைபெறும் இடம், குடும்ப அட்டைதாரர்கள் முகாமில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் முறை போன்ற விவரங்கள் தெளிவாக எழுதப்பட்டு நியாய விலைக் கடைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**6.13. மிக்ஜாம் புயல் நிவாரணப் பணி:**

சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் **மிக்ஜாம் புயலால்** வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 23,18,200 குடும்பங்களுக்கு வெள்ள நிவாரணத் தொகையாக ஒரு குடும்பத்திற்கு ரூ.6,000/- வீதம் 2,851 நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்பட்டது. மேலும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு புயல் நிவாரணப் பொருட்கள் ரூ.27 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டது.

**6.14. தென் மாவட்டங்களில் வெள்ள நிவாரணப் பணி:**

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் அதிகனமழையால் வெள்ள பாதிப்பு ஏற்பட்ட வட்டங்களில் உள்ள வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 6,36,970 குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.6,000/- வீதமும் மற்றும் தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள இதர

வட்டங்கள் மற்றும் தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கனமழையால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 13,38,269 குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.1000/- வீதமும் வெள்ள நிவாரணத் தொகை 3,176 நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்பட்டது. மேலும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு வெள்ள நிவாரணப் பொருட்கள் ரூ. 7 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டது.

**6.15. பொங்கல் பரிசுத் தொகுப்பு:**

2024-ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக்கரும்பு மற்றும் ரூ.1,000/- ரொக்கம் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு 2,08,11,842 அரிசி அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு 34,355 நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்பட்டது.

**6.16. பொது விநியோகத்திட்ட பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை:**

அரசின் சேவைத் திட்டங்களான கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், பொங்கல் பரிசு தொகுப்பு வழங்குதல், மிக்ஜாம் புயல், தென் மாவட்டங்களில் வெள்ள நிவாரணத் தொகை வழங்குதல் உள்ளிட்டவற்றை செயல்படுத்தும் நேர்வில் ஏற்படும் கூடுதல் பணிச்சுமையை ஈடுசெய்ய, நியாய விலைக் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர்கள் மற்றும் கட்டுநர்களுக்கு ஊக்கத் தொகையாக ஒரு குடும்ப அட்டைக்கு ரூ.0.50/- வீதம் வழங்கப்பட்டுள்ளது.

**6.17. பொது விநியோகத் திட்ட மானியம்:**

கூட்டுறவுச் சங்கங்கள் இலாப நோக்கின்றி நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன. குடும்ப அட்டைதாரர்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அத்தியாவசிய மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டப்

பொருட்களை விலையில்லாமல் அல்லது அரசால் நிர்ணயிக்கப்பட்ட மானிய விலையில் விநியோகம் செய்து வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் நியாய விலைக் கடைகளை நடத்துவதில் ஏற்படும் நட்டத்தை ஈடு செய்யும் வகையில் அரசு மானிய வடிவில் நிதியுதவியினை வழங்கு றது. 2021-2022-ஆம் நிதி ஆண்டில் ரூ.600.81 கோடியும், 2022-2023-ஆம் நிதி ஆண்டில் இதுவரை ரூ.495.18 கோடியும், 2023-2024-ஆம் நிதி ஆண்டில் இதுவரை ரூ.500 கோடியும் ஆக மொத்தம் ரூ.1,595.99 கோடியினை நியாய விலைக் கடைகள் நடத்துவதால் ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்ய கூட்டுறவு நிறுவனங்களுக்கு பொதுவிநியோகத் திட்ட மானியமாக விடுவித்து அரசு ஆணையிட்டுள்ளது.

**6.18.கூட்டுறவுகளின் மூலமாக நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை அடைதல்:**

நலிவுற்றோர் மற்றும் வறுமையில் வாழும் மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதிலும் மற்றும் நலிவுற்ற

மக்களின் நீடித்த நிலையான வளர்ச்சிக்கும், பொது விநியோகத் திட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. நிலையான வளர்ச்சிக்கான 17 இலக்குகளில், இலக்கு எண்.1. **வறுமையின்மை**, இலக்கு எண்.2. **பசியின்மை** மற்றும் இலக்கு எண்.3. **நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு** ஆகிய மூன்று இலக்குகளை அடைவதற்கு ஏதுவாக தமிழ்நாட்டில் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால், தமிழ்நாட்டில் இது திறம்பட செயல்படுத்தப்பட்டுள்ளது.

## இயல் - 7

## கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

### 7.1. முன்னுரை:

கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் அறிவுத் திறனை மேம்படுத்தும் தலையாய நோக்கத்துடன் கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சியினை மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும், அதன் கட்டுப்பாட்டில் செயல்படும் மாவட்ட அளவிலான 38 மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களும் மேற்கொண்டு வருகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தில் 38 மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களும் மற்றும் 17 தலைமை கூட்டுறவு நிறுவனங்களும் உறுப்பினர்களாக உள்ளனர். மேலும், கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படை கோட்பாடுகளை பொதுமக்களிடையே கொண்டு செல்லும் பொருட்டும், விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டும், பொருட்காட்சிகள், கருத்தரங்குகள் மற்றும் கூட்டுறவு வார விழாக்களையும்

ஏற்பாடு செய்து வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தில் வகுத்துள்ளபடி தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவுச் சங்கங்களின் நிகர இலாபத்தில் ஒரு பகுதியை கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக்கும் மற்றும் கூட்டுறவுக் கல்வி நிதிக்கும் வசூலித்து வருகிறது. கூட்டுறவு ஆராய்ச்சி, கல்வி, பயிற்சி மற்றும் கூட்டுறவு தொடர்பான செய்திகளை மக்களிடையே கொண்டு செல்வதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படுகிறது.

7.1.1. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் “கூட்டுறவு” என்ற தமிழ் மாத இதழையும், “**தமிழ்நாடு ஜெர்னல் ஆப் கோவாப்பரேஷன்**” என்ற ஆங்கில மாத இதழையும் மற்றும் மாதமிருமுறை “கூட்டுறவு முரசு” என்ற தமிழ் இதழையும் வெளியிட்டு வருகிறது.

7.1.2. இவ்விதழ்களில் பதிவாளர் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அனைத்து

செயற்பதிவாளர்களின் துறைகளின் கீழ் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகள் குறித்த விவரங்கள் வெளியிடப்பட்டு வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், அனைத்து வகை கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள உறுப்பினர்களுக்கு மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களின் உதவியுடன் உறுப்பினர் கல்வித் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் மாநிலத்தில் உள்ள அனைத்து வகையான கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினரல்லாதவர்களுக்கும் கூட்டுறவு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் உறுப்பினர் கல்வித்திட்ட வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

**7.2. மாவட்ட கூட்டுறவு ஒன்றியம்:**

மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தில் சம்பந்தப்பட்ட மாவட்டத்தில் செயல்படும் அனைத்துவகை கூட்டுறவு சங்கங்களும் உறுப்பினர்களாக உள்ளனர். இம்மாவட்ட

கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் உறுப்பினர் கல்வி திட்டம், இளைஞர் ஈர்ப்பு முகாம், அனைத்திந்திய கூட்டுறவு வார விழா, இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சி மூலம் மாவட்டத்தில் கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்காக நடத்தப்படுகிறது. மேலும், கூட்டுறவுக் கல்வி, கூட்டுறவு தொடர்பான கருத்தரங்கு நடத்துதல், கூட்டுறவு கண்காட்சி நடத்துதல், நூலகம் பராமரித்தல், சட்டப்பூர்வ நிதிகள் வசூலித்தல், கூட்டுறவு பயிற்சி ஆகிய பணிகளை செயல்படுத்தும் மாவட்ட அளவிலான அமைப்பாகும்.

7.2.1. இதன் மூலம் மாவட்டத்தில் கூட்டுறவு இயக்கம் முறையான வளர்ச்சி பெறவும் வளமான சூழ்நிலையினை உருவாக்கவும் இது உதவுகிறது. மேலும், கூட்டுறவு இயக்கம் குறித்து பொதுமக்களுக்கும், அரசுக்குமிடையே ஓர் தொடர்பு நிறுவனமாக செயல்பட்டு வருகிறது.

## 7.3. கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள்:

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் அங்கங்களாக மாநிலத்தில் 22 கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 2023-24-ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிதாக ஒரு கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையம் தொடங்கப்பட்டு முறையே 200 மற்றும் 319 மாணவர்கள் முழுநேர மற்றும் அஞ்சல்வழி கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சியில் சேர்ந்துள்ளனர். 2023-24-ஆம் ஆண்டில் அனைத்து கூட்டுறவு மேலாண்மை நிலையங்களிலும் அஞ்சல்வழி பயிற்சி தொடங்கப்பட்டு தகுதியுள்ள 8,101 நபர்கள் சேர்ந்து பயின்று வருகின்றனர்.

7.3.1. முழுநேர மற்றும் அஞ்சல்வழி கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சிக்கு இணையவழி மூலம் விண்ணப்பம் பெறப்பட்டு பயிற்சியாளர்கள் பயிற்சியில் சேர அனுமதிக்கப்படுகிறார்கள்.

7.3.2. இந்த 23 பயிற்சி நிலையங்கள் கூட்டுறவுத் துறைப் பணியாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் பயன்பெறும் வகையில் குறுகியகாலப் பயிற்சிகளை நடத்தி வருகின்றன. இப்பயிற்சி நிலையங்கள் முறையான கூட்டுறவு பட்டயப் பயிற்சியை நடத்துவதுடன், அஞ்சல்வழி பயிற்சியினையும் நடத்தி வருகிறது. இதன் மூலம் இளைஞர்களுக்கு பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களில் வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு ஊக்கமளிக்கிறது. சமையல் கலை கைவினைஞர்களை உருவாக்கும் பொருட்டு, ஏழு கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள் மற்றும் இரண்டு கூட்டுறவு தொழிற் பயிற்சி நிலையங்களில் சான்றிதழுடன் கூடிய சமையல் கலை கைவினைஞர் (பொது) பயிற்சி அளிக்கப்படுகின்றது.

**7.4. தொழிற் கல்வி:**

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் பொருட்டு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், இரண்டு

கூட்டுறவுத் தொழிற்பயிற்சி நிறுவனங்களை கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூ மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் நடத்தி வருகிறது. இக்கூட்டுறவுத் தொழிற் பயிற்சி நிலையங்களில், கணினி தொழில்நுட்ப உதவியாளர் பயிற்சி, தையற்கலை, நகை மதிப்பீட்டாளர் பயிற்சி, மின் பழுதுபார்த்தல், சமையல் கலை கைவினைஞர் (பொது) பயிற்சி ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றது. மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடியில் ஒரு கூட்டுறவுத் தொழில்நுட்பக் கல்லூரியையும் நடத்தி வருகிறது. இத்தொழில்நுட்பக் கல்லூரியில் இயந்திரப் பொறியியல், கணினி பொறியியல், மின்சாரம் மற்றும் மின்னணு பொறியியல் ஆகிய மூன்று பட்டயப் பயிற்சிகளை வழங்கி வருகிறது.

**7.5.கூட்டுறவு மேலாண்மை தொடர்பான உயர் பட்டயப் பயிற்சி மற்றும் குறுகியகாலப் பயிற்சி:**

தேசிய கூட்டுறவு பயிற்சிக் குழுவால் (புதுடெல்லி), சென்னை (NICM) மற்றும் மதுரையில் (ICM) நடத்தப்பட்டு

வரும் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையங்களில் கூட்டுறவு மேலாண்மையில் உயர் பட்டயப்பயிற்சி நடத்தப்பட்டு வருவதுடன் வணிக மேலாண்மையியல் முதுகலை பட்டப்படிப்பும் (MBA) நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையங்களுக்கு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் நிதி உதவி அளித்து வருகிறது.

7.6. **கலை மற்றும் அறிவியல் கல்லூரி**:

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை நடத்தி வருகிறது. இக்கல்லூரியில் 7 பாடப்பிரிவுகளில் மாணவர்கள் சேர்ந்துள்ளனர். இக்கல்லூரிக்கு ரூ.75.75 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்படும்.

7.6.1. இதர கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைப் போல் அல்லாமல், கட்டப்படவுள்ள கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தனித்துவத்துடனும், நேர்த்தியான

வடிவமைப்புடனும் திகழும். கல்லூரிக்கான கட்டடம் கட்டி முடிக்கப்படும் போது, இது 14,890 சதுர மீட்டர் பரப்பளவில் 40 வகுப்பறைகள், 15 சோதனைக் கூடங்கள், 200 இருக்கைகள் கொண்ட திறந்தவெளி கூட்ட அரங்கம், 620 இருக்கைகள் கொண்ட முழுமையாக குளிரூட்டப்பட்ட கூட்ட அரங்கம், 200 இருக்கைகள் கொண்ட நூலகம் போன்றவற்றைக் கொண்டிருக்கும். இக்கல்லூரி புதிய கட்டடத்தில் செயல்படத் துவங்கும் போது 10 வகையான பாடப்பிரிவுகளில் பயிலும் இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களையும் சேர்த்து அதிகபட்சமாக 2000 மாணவர்கள் கல்வி பயில வழிவகுக்கும்.

**7.7. பல்கலைக் கழகங்களில் கூட்டுறவு ஆராய்ச்சி:**

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவில் ஆராய்ச்சி மேற்கொள்ள மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் பாரதியார் பல்கலைக் கழகம், பெரியார் பல்கலைக் கழகம் மற்றும்

காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் ரூ.5.00 இலட்சம் வைப்புத் தொகை வைத்துள்ளது. இதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை மூலம் கூட்டுறவு மற்றும் அதன் தொடர்புடைய இனங்களில் ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதுவரை 25 ஆராய்ச்சித் திட்டங்களுக்கு ரூ.21.25 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**7.8. கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி (CRDF):**

கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் நிகர இலாபத்தில் 3 விழுக்காடு தொகையை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக்கு அளிக்கின்றன. இந்நிதி, கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக் குழுவின் ஒப்புதல் பெற்ற பிறகே விடுவிக்கப்படுகிறது. இந்நிதி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும்

கூட்டுறவுச் சங்கங்களின் செயல்திறனை அதிகரிப்பதன் மூலமாக விவசாயிகள், நுகர்வோர், பழங்குடியினர், மாணவர்கள், பணியாளர்கள் மற்றும் அதிக அளவிலான பொது மக்கள் பயனடைவதற்கு மானியமாகவும் வட்டியில்லா கடனாகவும் வழங்கப்படுகிறது.

7.8.1. 2023-24-ஆம் ஆண்டில் 31.03.2024 முடிய இந்நிதியிலிருந்து ரூ.5.79 கோடி மானியமாகவும், ரூ.23.54 கோடி வட்டியில்லாக் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை கூட்டுறவுச் சங்கங்களில் பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை கட்டுதல், அலுவலகக் கட்டடம் கட்டுதல், உலர் கலன்கள் அமைத்தல், வாகனங்கள் வாங்குதல், சூரிய உலர் கலன்கள் மற்றும் சூரிய தகடு நிறுவுதல், நுகர்வோர் சுய சேவைப் பிரிவை நவீனப்படுத்துதல், கூட்டுறவுச் சங்கங்களை நவீனமாக்குதல், சிப்பமிடும் கருவிகள் வாங்குதல், எடையிடும் இயந்திரம் அமைத்தல், பதனிடும் அலகுகள் அமைத்தல், கரும்பு

அறுவடை இயந்திரம் வாங்குதல், கூட்டுறவு வளாகம் கட்டுதல் மற்றும் நெசவாளர்களுக்கு பெடல் தறிகள் வழங்குதல் போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படுகிறது.

**7.9. கூட்டுறவுக் கல்வி நிதி:**

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுறவுக் கல்வி நிதிக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் நிகர இலாபத்தில் 2 விழுக்காடு தொகையை வழங்குகின்றன. இந்நிதியிலிருந்து கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி, கூட்டுறவு பிரச்சாரம், கூட்டுறவு விளம்பரம் போன்ற பணிகளுக்கு கூட்டுறவுக் கல்வி நிதிக் குழுவின் ஒப்புதல் பெற்று நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது.

7.9.1. 2023-24-ஆம் ஆண்டில் 31.03.2024 முடிய இந்நிதியிலிருந்து ரூ.67.46 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கும், துறை அலுவலர்களுக்கும் குறுகிய காலப்

பயிற்சிகள் நடத்துதல், மாவட்டங்களில் உறுப்பினர் கல்வித் திட்டம் மற்றும் இளைஞர் ஈர்ப்பு முகாம்கள் நடத்துதல் மற்றும் அகில இந்திய கூட்டுறவு வார விழாக்கள் கொண்டாடுதல் ஆகியவற்றிற்கு இந்நிதி பயன்படுகிறது.

# இயல் - 8

## ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டம்

8.1. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் கூட்டுறவு நிறுவனங்களின் பொருளாதார ஆற்றல் நிலையை வலுப்படுத்துதலை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டமானது கூட்டுறவுகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த முன்னுரிமை அளிக்கிறது.

8.2. இத்திட்டத்திற்கான நிதியினை தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் கடனாக மாநில அரசுக்கு வழங்குகிறது. இதனை மாநில அரசு கூட்டுறவு நிறுவனங்களுக்கு கடன் மற்றும் பங்குத்தொகையாக வழங்குகிறது. தமிழ்நாட்டில் 1989-இல் தொடங்கப்பட்டு இதுவரை 37 மாவட்டங்களில் ரூ.821.75 கோடி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின் செயல்பாடானது, கூட்டுறவுச் சங்கங்களை

பல்நோக்கு நிறுவனங்களாக மாற்றி புதிய பரிணாமத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் அடிமட்ட நிலையிலிருக்கும் சங்கங்களில் சேமிப்பு கொள்ளளவினை உயர்த்தியும், வணிக வருவாயினை மேம்படுத்தியும், செயலற்ற சங்கங்களை புத்துயிருட்டியும், புதிய சேமிப்பு கிடங்கு கட்டடங்களை உருவாக்கியும் சீர் செய்தும், மனிதவள மேம்பாடு மற்றும் திறன் வளர்ச்சியினை ஏற்படுத்தியும் தரம் உயர்த்தியுள்ளது. தற்போது இத்திட்டத்தின் கீழ் பல்வேறு மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட கடன் ரூ.130.45 கோடி, அதற்கான வட்டி, பங்குத்தொகை ரூ.473.423 கோடி மற்றும் பங்குஈவுத் தொகை ஆகியவை நிர்ணயிக்கப்பட்ட தேதிகளில் வசூலிக்கப்பட்டு வருகிறது.

## இயல் - 9

## கூட்டுறவுத் தேர்தல்

9.1. தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம், 1983 சட்டப்பிரிவு 33-A-ன்கீழ் தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் உருவாக்கப்பட்டது.

9.2. 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 33(11)(b)-ன்படி ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் தேர்தல் அட்டவணை தயாரித்தல் மற்றும் அனைத்து தேர்தல் நடத்தப்படுவதை கண்காணித்தல், வாக்காளர் பட்டியல் தயார் செய்தல், வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாடு செய்வதானது பிரிவு 33-A-ன்கீழ் அமைக்கப்பட்ட தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்கள் தேர்தல் ஆணையத்திடம் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

9.3. 2013-ஆம் ஆண்டில், 97-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், 2011-ன்படி, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள்

சட்டம், 1983-இல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, பெண்களுக்கு அதிகாரம் அளிக்கவும், சமூக நீதிக்கு உத்தரவாதம் அளிக்கவும், கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுவில் 18% பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கும் மற்றும் 30% பெண்களுக்கும் இடஒதுக்கீடு செய்யப்பட்டது.

9.4. தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தால் 2018-ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 14 செயற்பதிவாளர்கள் கட்டுப்பாட்டிலுள்ள 18,805 கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் நான்கு கட்டங்களாக நடத்த அறிவிக்கப்பட்டது. 18,805 கூட்டுறவுச் சங்கங்களில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டிலுள்ள 7,101 கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல்கள் நடத்தப்பட்டன. இதில் 77,204

நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பொறுப்பு ஏற்றுக்கொண்டனர்.

9.5. தற்போது, 31.03.2024 அன்றுள்ளபடி, தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள சங்கங்களையும் சேர்த்து சுமார் 7,655 கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

9.6. அனைத்து கூட்டுறவு சங்கங்களிலும் தகுதியான உறுப்பினர்களை சேர்க்கவும், இறந்த / தகுதியில்லாத உறுப்பினர்களை நீக்கும் பணி நடைபெற்று கொண்டு இருக்கின்றது. அதன்படி, 31.03.2024 தேதியில் 7,655 கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 1,39,21,066 மொத்த உறுப்பினர்களில் 73,95,378 உறுப்பினர்களின் ஆதார் எண் மற்றும் குடும்ப அட்டை எண் சேகரிக்கப்பட்டு, மீதமுள்ள உறுப்பினர்களிடமும் இப்பணி தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது.

## இயல் - 10

## மின்-அலுவலகம்

### 10.1. முன்னுரை:

அனைத்து அரசு அலுவலகங்களிலும் காகிதப் பயன்பாட்டை ஒழிக்கவும், டிஜிட்டல் பணிச்சூழலை உருவாக்கவும், தமிழ்நாடு அரசின் தகவல் மற்றும் தொழில்நுட்பத் துறையால்(IT&DS), தமிழ்நாடு மின்-அலுவலகம் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கூட்டுறவுத் துறையில், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அலுவலகம், மண்டல அலுவலகங்கள், துணைப் பதிவாளர் அலுவலகம் மற்றும் துணைப் பதிவாளர் (Public Distribution System – பொது விநியோகத் திட்டம்) அலுவலகம் உள்ளிட்ட 158 அலுவலகங்களைச் சேர்ந்த 454 ஊழியர்களுக்கும் மின்-அலுவலகப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

10.1.1. அனைத்து கோப்பு கையாளும் பதவிகளுக்கும் மொத்தம் 1,917 பணியாளர் குறியீடுகள் உருவாக்கப்பட்டு

கூட்டுறவு துறையில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

**10.2. கூட்டுறவு தரவு முகப்பு :**

கூட்டுறவுத் துறையில் பல்வேறு திட்டங்கள், கடன்கள், கட்டுமானச் செயல்பாடுகள் போன்றவற்றின் நிகழ்நேரத் தரவை அணுகுவதற்கும் தரவுகள் மூலம் முடிவெடுப்பதை மேம்படுத்துவதற்கும், ஒரு தரவு முகப்பு உருவாக்கப்பட்டுள்ளது. கடன்கள், வைப்புத்தொகைகள், கொள்முதல், விற்பனை, சேவைகள், குடோன் நிர்வாகம், பயிர்க்கடன்கள் மற்றும் இத்துறையில் வழங்கப்பட்ட கடன்கள் போன்ற பல்வேறு நிதி நடவடிக்கைகளின் தரவுகளை இதன் மூலம் அணுக முடியும். மக்களுடன் முதல்வர், பொங்கல் பரிசுக்கான கரும்பு கொள்முதல், சிறு வணிகர்களுக்கான சிறப்பு கடன்கள் போன்ற முக்கியமான திட்டங்கள் இந்த முகப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

10.2.1. அனைத்து சங்கங்கள் மற்றும் துறை ஊழியர்களின் தரவுகள், நகைக்கடன் சரிபார்ப்பு, சங்கங்களை ஆய்வு செய்தல் மற்றும் மின்-வாடகை - விவசாயிகளுக்கு சங்கங்கள் மூலம் விவசாயக் கருவிகளை வாடகைக்கு எடுப்பது என அதன் நோக்கம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

## இயல் - 11

## வளர்ச்சிப் பாதை

சீரிய முறையில் நூற்றாண்டுகளைக் கடந்து செயல்படும் செம்மையான அமைப்பாக கூட்டுறவு நிறுவனங்கள் உள்ளன. அவை காலத்தின் தேவைக்கேற்ப தங்களை புதுப்பித்துக் கொள்ளும் அவசியத்தை உணர்ந்து உள்ளன. அவ்வாறே தமிழக அரசும் கூட்டுறவு நிறுவனங்களை புத்தாக்கம் செய்ய பல திட்டங்களை தொடர்ந்து வழங்கி வருகின்றது. அவற்றில் குறிப்பிடத்தக்கவை

1. அனைத்து கூட்டுறவு நிறுவனங்களையும் கணினிமயமாக்கல். அதன்மூலம் உறுப்பினர்களுக்கு வெளிப்படையான விரைவான தரமான சேவை வழங்குதல்.
2. தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் உறுப்பினர்களுக்கு கடன் வழங்குவதுடன் பல்நோக்கு கொண்ட சேவைகள்

வழங்கும் நிறுவனமாக செயல்படத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

3. மக்களுக்கு தரமான கலப்படமற்ற பொருட்களை நியாயமான விலையில் வழங்கும் வகையில் பதப்படுத்தும் அலகுகள் அமைத்தல்.
4. 'வாழ்திறனற்ற சங்கங்களுக்கு நிதி மற்றும் நிர்வாக உதவிகள் வழங்கி அவற்றை இலாபகரமாக செயல்பட வைத்தல்.
5. புதிய கட்டமைப்புகள் உருவாக்குதல் மற்றும் நவீனமயமாக்குதல் மூலம் கூட்டுறவு நிறுவனங்களை தொடர்ந்து புத்தாக்கம் செய்தல்.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் நமது மாநிலத்தில் மக்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்த கூட்டுறவுத் துறை அயராது பாடுபட்டு வருகிறது.

**கே.ஆர். பெரியகருப்பன்**
கூட்டுறவுத் துறை அமைச்சர்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.மு.க.ஸ்டாலின்** அவர்கள் 10.01.2024 அன்று ஆழ்வார்ப்பேட்டை, ஸ்ரீராம்நகர் நியாயவிலைக் கடையில் பொங்கல் பரிசுத்தொகுப்பு மற்றும் 1000 ரூபாய் ரொக்கப் பரிசினை வழங்கி திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.மு.க.ஸ்டாலின்** அவர்கள் 17.12.2023 அன்று சென்னை வேளச்சேரி, சக்தி விஜயலட்சுமி நகர் நியாயவிலைக் கடையில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6000 நிவாரணத் தொகை வழங்கும் பணியினை தொடங்கி வைத்தார்கள்.




மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் **திரு.உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் தனது தொகுதி மேம்பாட்டு நிதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள நியாயவிலைக் கடை கட்டிடத்தை 13.12.2023 அன்று திறந்துவைத்தார்கள்.



மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் **திரு.கே.ஆர்.பெரியகருப்பன்** அவர்கள் 30.12.2023 அன்று தூத்துக்குடி மாவட்டம் ஏரல் வட்டத்தில் அதி கனமழையால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு ரூ.6000 நிவாரணத் தொகையினை வழங்கினார்கள்.




விவசாயிகள் தங்களது பொருட்களை இடைத்தரகர்களின்றி சந்தைப்படுத்தி ஆதாயமான விலைக்கு விற்பனை செய்வதற்கு ஏதுவாக திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் நடத்தப்பெறும் பருத்தி ஏலம்.




இந்தியாவிலேயே முன்னோடியாக 1151 கிடங்குகளை, கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்தில் (WDRA) பதிவு செய்யப்பட்டதை பாராட்டி புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட விருது.




மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் **திரு.கே.ஆர்.பெரியகருப்பன்** அவர்கள் கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகளை 02.02.2024 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.




தக்காளி விலை ஏற்றத்தை கட்டுப்படுத்த கூட்டுறவுத்துறையின் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் கொள்முதல் விலைக்கே தக்காளி விற்பனை செய்யப்பட்டதை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் **திரு.கே.ஆர்.பெரியகருப்பன்** அவர்கள் 28.06.2023 அன்று ஆய்வு செய்தார்கள்.




விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் கரும்பு அறுவடை இயந்திரம் வழங்கும் பொருட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை பல்சேவை மையங்களாக மாற்றும் திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ள கரும்பு அறுவடை இயந்திரம்.இடம்: உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.




குறைந்த வாடகையில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் வழங்கும் பொருட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை பல்சேவை மையங்களாக மாற்றும் திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ள கதிர் அறுவடை இயந்திரங்கள்.இடம்:இலுப்பூர், புதுக்கோட்டை மாவட்டம்.



கூட்டுறவுத் துறையில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை பல்சேவை மையங்களாக மாற்றும் திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் நுண்ணூட்டச்சத்து/பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பதற்கான பயன்பாட்டில் உள்ள உலங்கு ஊர்தி(Drone).இடம்: M.பாலையம்பட்டி, விருதுநகர் மாவட்டம்.

## திருநெல்வேலி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை



திருநெல்வேலி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கூட்டுறவு மருந்தகத்தில் 20 சதவிகிதம் வரை தள்ளுபடியில் மருந்துகள் விற்பனை செய்யப்படுகின்றன.